★ காஞ்சிபுரம்
★ ரெயின் போ பெனாரீஸ்
★ டபிள் செற் பீஸ் பெனாரீஸ்
★ மைசூர் சில்க்ஸ்
★ காயத்திரி சில்க்ஸ்
★ பட்டு வேட்டிகள்
மற்றும் சகல விதமான பட்டுப் புடைவைகளுக்கும்
ராசி சில்க்ஸ்
70, 71A, நவீன சந்தை, (உட்புறம்) யாழ்ப்பாணம்.

பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மங்கள வைபவங்களுக்கு ஏற்ற பட்டுப் புடைவைகள் மற்றும் சகல விதமான ரெடிமேற் வகைகளுக்கு
ராசி சில்க்ஸ்

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 வைகாசி 13 வெள்ளிக்கிழமை (27 - 05 - 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 180

# புல்மோட்டையில் தாக்குதல்
# ஐந்து இராணுவத்தினர் பலி!

## நான்கு படையினர் காயம்

கொழும்பு, மே 27

அனுராதபுரம் மாவட்டத்தில் — திருமலைக்கு வடக்கே — புல்மோட்டையில் விடுதலைப் புலிகள் நேற்று நடத்திய திடீர் தாக்குதல் ஒன்றில் ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் என்றும் இன்னும் நான்கு இராணுவத்தினர் காயமடைந்தனர் என்றும் கொழும்பில் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

விடுமுறையில் தமது வீடுகளுக்குச் செல்வதற்காக பயணம் செய்து கொண்டிருந்த இராணுவத்தின் மீதே விடுதலைப் புலிப் போராளிகள் தாக்குதலை நடத்தினர் என்றும் —

போராளிகளின் நடமாட்டம் இல்லாத பகுதி என நம்பப்படும் பகுதியூடாக படையினர் பயணம் செய்ததால், அவர்கள் தாக்குதலை எதிர்பார்த்திருக்கவில்லை என்றும் இராணுவ அறிவிப்பாளர் தெரிவித்தார்.

இதற்கிடையில் —

கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகள் சமீப காலத்தில் தங்கள் தாக்குதல்களை வெகுவாக அதிகரித்துள்ளனர் என்றும் —

இந்த வாரத்தில் மட்டும் இதுவரை பன்னிரண்டு படையினர் கொல்லப்பட்டனர் என்றும் வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது. (ஒ-எ-3)

**முச்சந்தி முரளி**



சொத்தி உபாலியை சர்வதேசப் பிரமுகர் ஆக்கி விட்டிருக்கினம் பாருங்கோ.... !

# குடாநாட்டு முகாம்களில் இருந்து
# படையினர் ஓயாது தாக்குதல்!

யாழ்ப்பாணம், மே 27

கடந்த இரு நாட்களாக குடாநாட்டில் உள்ள அனைத்து ஸ்ரீலங்கா படைமுகாம்களில் இருந்தும் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி ஓயாது தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

பகலும் இரவும் படையினர் பலத்த ஷெல் தாக்குதல்களை நடத்தி வருவதால், மக்கள் பெரும் பதற்றத்துடன் காணப்படுகின்றனர். பல இடங்களில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்து பாதுகாப்பான இடங்களை நாடியுள்ளனர்.

வடமராட்சி கிழக்கு மற்றும் பொன்னாலை கடற்பரப்பில் பீரங்கிப் படகுகளில் இருந்து கடற்படையினர் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி கண்மூடித்தனமாக பீரங்கி மற்றும் துப்பாக்கி வேட்டுக்களை தீர்க்கின்றனர்.

நேற்று இரவு 8 மணியளவில் பொன்னாலை — அராலித்துறை கடற்பகுதியில் ஹெலிக்கொப்டர் ஒன்று தாழப் பறந்து நோட்டமிட்டது.

குடாநாட்டு முகாம்களின் காவல் நிலைகளில் உள்ள படையினரும் கண்டபடி துப்பாக்கிப் பிரயோகம் நடத்துகின்றனர். இதனால் முகாம்களை அண்டிய பிரதேசங்களில் உள்ள மக்கள் பீதியுடன் நாட்களை கழித்து வருகின்றனர்.

இதேவேளை, வான் பரப்பில் விமானங்கள், ஹெலிகளின் ஓட்டமும் அதிகரித்து காணப்படுகிறது. குறிப்பிட்ட சில பகுதிகளில் அவ்ரோ, புக்காரா மற்றும் ஹெலிகள் அடிக்கடி நோட்டம் பார்க்கின்றன. (ஒ-3-15-28-117-173)

## வடமராட்சி கிழக்கில் தாக்குதல் நீடிக்கிறது

யாழ்ப்பாணம், மே 27

ஸ்ரீலங்காவின் முப்படைகளும் வடமராட்சி கிழக்கில் மக்கள் குடியிருப்புக்கள் மீது தொடர்ச்சியாக தாக்குதல் நடத்தி வருகின்றன.

நேற்று முன்தினம் மாலை ஆரம்பித்த தாக்குதல்கள் நேற்றும் தொடர்ந்தன.

இதனால் வடமராட்சி கிழக்கு பகுதி மக்கள் பெரும் பதற்றத்துடன் காணப்படுகின்றனர்.

நேற்று முன்தினம் மாலை 5-45 மணியளவில் கரையோரக் கிராமங்களை நோக்கி புக்காரா விமானம் ஒன்று குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தியது.

தொடர்ந்து வீதியால் சென்று கொண்டிருந்த வாகனங்கள் மீது ஹெலி ஒன்று 50 கலிபர் தாக்குதலை நடத்தியது. இத்தாக்குதல் இரவிரவாகத் தொடர்ந்தது.

இதேவேளை —

வடமராட்சி கிழக்கு கடற்பிரதேசத்தில் பிரவேசித்த ஸ்ரீலங்கா கடற்படையினரும் மக்கள் குடியிருப்புக்களை நோக்கி பலத்த ஷெல் தாக்குதலை நடத்தினர். (ஒ-3-173)

## காலை முதல் நண்பகல் வரை பீரங்கித் தாக்கு

நேற்றுப்பகல் வேளையில் காரைநகர் பகுதியில் நிலை கொண்டுள்ள கடற்படை பீரங்கிப் படகுகள் வலிகாமம் மேற்கு பகுதிகளை நோக்கி பீரங்கித் தாக்குதல்களை நடத்தின.

நேற்றுக்காலை 9 மணி முதல் நண்பகல் வரையும் கடற்படையினர் பீரங்கித் தாக்குதல்களை நடத்தியபடி இருந்தனர்.

இதேவேளை— காரைநகர் கரைப்பகுதிகளில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் தொடர்ச்சியாக 50 கலிபர் தாக்குதல்களை நடத்தினர். [ஒ-3]

## அராலித்துறையில் மீனவர் காயம்

அராலித்துறை கடற் பிராந்தியத்தில் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்தவர்களை நோக்கி, ஊர்காவற்றுறையில் நிலைகொண்டுள்ள இராணுவம் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதில் மீனவர் ஒருவர் காயமடைந்தார்.

நேற்று இரவு 7.30 மணிக்கு இடம்பெற்ற இச்சம்பவத்தில் ஊர்காவற்றுறை தம்பாட்டியில் இருந்து இடம்பெயர்ந்து கொக்குவில் மேற்கில் வசிக்கும் தம்பிராசா செந்தில்குமரன் [வயது 23] என்பவரே காயமடைந்தவராவார்.

## சொத்தி உபாலியுடன் செஞ்சிலுவையினர் சந்திப்பு!

கொழும்பு, மே 27

செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுவின் உறுப்பினர்கள் கொழும்பில் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ள ''பாதாள உலக'' மரணப்படைத் தலைவர் என்று வர்ணிக்கப்படும் சொத்தி உபாலியையும் ஏனைய சந்தேக நபர்களையும் சந்தித்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களின் தேவைகளைக் கண்டறியவும்—

அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள இடங்களின் நிலைவரம் பற்றி தெரிந்து கொள்ளவும் — அனுமதி வழங்கும்படி செஞ்சிலுவைச் சங்க சர்வதேச குழு பொலிஸாரைக் கேட்டிருந்தது.

அதற்கு இணங்கவே பொலிஸார் அனுமதி வழங்கினர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-எ-6)

## சொத்தி உபாலியை சந்திக்க அப்படி என்ன அவசரம்?

### சுதந்திரக்கட்சி எம். பி. கேள்வி

கொழும்பு, மே 27

காவலில் வைக்கப்பட்டுள்ள 'பாதாள உலக' நபர்களை செஞ்சிலுவைச் சங்கச் சர்வதேசக் குழு உறுப்பினர்கள் சென்று பார்வையிட்டது குறித்து சுதந்திரக் கட்சி எம். பி. ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே சந்தேகம் தெரிவித்துள்ளார்.

'பாதாள உலக' கொலைஞர்களின் கொடூரச் செயல்களால் பாதிக்கப்பட்டுள்ளவர்களின் நிலைமையைக் கண்டறிவதற்கு எந்த வித முயற்சியையும் மேற்கொள்ளாத செஞ்சிலுவைச் சங்கத்தினர், கைதாகிய பாதாள உலகின் தலைவர் மற்றும் அவரது சகாக்களின் நிலைமையை அறிந்து கொள்வதற்காக அவசரமாகத் தலையிட்டிருப்பது சந்தேகத்துக்குரிய விஷயம் என்றும் அவர் தெரிவித்தார்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துக்கும் பாதாள உலகினருக்கும் இடையிலான உறவு யாதென வினாவிய திரு. பெர்னாண்டோபுள்ளே,

இவ்விஷயம் தேசிய மட்டத்தில் மட்டுமன்றி, சர்வதேச மட்டத்திலும் விசாரிக்கப்பட வேண்டிய ஒன்று எனவும் தெரிவித்தார். [இ-எ]

**பட்டதாரி பயிலுநர் பதவிப் பரீட்சை:**

## ஆவணங்களை எடுத்துவர வவுனியா இராணுவம் மறுப்பு

யாழ்ப்பாணம், மே 27

யாழ். செயலகத்தில் இன்று ஆரம்பமாதவிருந்த பட்டதாரி பயிலுநர் பதவிகளுக்கான நேர்முகப் பரீட்சைக்குரிய ஆவணங்களை எடுத்துவர தாண்டிக்குளம் இராணுவத்தினர் அனுமதி மறுத்ததாக தெரிவிக்கப்பட்டது.

இந்த நியமனங்களுக்கான பத்திரங்கள் மற்றும் ஆவணங்களை யாழ் செயலக அதிகாரி ஒருவர் கொழும்பில் இருந்து எடுத்து வந்தார்.

அப்பத்திரங்களை எடுத்துச் செல்ல அனுமதிக்க முடியாது என படையினர் கூறியதை அடுத்து அவற்றை கொழும்புக்கு திரும்பி அனுப்பிவிட்டு பிரஸ்தாப அதிகாரி யாழ்ப்பாணம் திரும்பிவிட்டார்.

அவர் தம்முடன் எடுத்து வந்துள்ள சில பத்திரங்களை பிரதி செய்து பத்திரங்களை தயார் செய்து பட்டதாரிகளுக்கான நேர்முகப் பரீட்சைகளை அடுத்த வாரம் நடத்த செயலக அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். (மற்றொரு செய்தி 5 ஆம் பக்கத்தில்) (ஒ-3)

# டி. பி அமைச்சரவை மாற்றம் மேலும் 10 தினங்கள் தாமதம்

கொழும்பு, மே 27

ஜனாதிபதி விஜேதுங்கா அமைச்சரவையை மாற்றி அமைப்பது குறைந்தது இன்னும் பத்துத் தினங்கள் தாமதமாகும் என்று அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஜனாதிபதி விஜேதுங்கா தாம் விரும்பியவர்களை தேசியப் பட்டியல் மூலம் எம். பிகளாக நியமிப்பதில் ஏற்பட்டுள்ள சிக்கலைத் தீர்க்கும் வரை அமைச்சரவை மாற்றம் பின்போடப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பதவி விலகல் தொடர்பாக ஆறு தேசியப்பட்டியல் எம். பிக்களை ஜனாதிபதி அழைத்துப் பேசிய போது, பதவி விலக முன் வந்த திரு அலெக் றொபர்ட்சன் பின்னர் மனதை மாற்றிக் கொண்டு விட்டார் என்று ஐ. தே. க. பொதுச் செயலாளர் டாக்டர் விஜேசேகரா கூறினார்.

இன்னொரு தேசியப்பட்டியல் எம். பி. ரெஜினால்ட் பெரேரா, ஜனாதிபதி விஜேதுங்காவிடம் நேரடியாக, தாம் பதவி விலகப் போவது இல்லை என்று கூறிவிட்டார்.

அச்சந்திப்பின் போது டாக்டர் விஜேசேகராவும் ஜனாதிபதியுடன் இருந்தார் (உ-எ)

## இன்று தபால் விநியோகம்

யாழ்ப்பாணம், மே 27

யாழ். குடாநாட்டில் இன்று வெள்ளிக்கிழமை தபால் விநியோகம் செய்யப்படும் என யாழ் பிரதம தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த புதன்கிழமை கோமாரி கப்பலில் எடுத்து வரப்பட்ட 199 தபால் பொதிகள் நேற்று பிற்பகல் இறக்கப்பட்டு யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்பட்டன. [ஒ-173]

**பிணையை நீக்கக் கோர்க!**

## போக்குவரத்துப் பிரிவினர் பயணிகளுக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், மே 27

வடபகுதிக்கு வெளியே செல்பவர்கள் மீளவும் வடபகுதிக்குள் வரும்போது வவுனியா சோதனை நிலையம், பருத்தித்துறை இறங்குதுறை மன்னார் விடத்தல் தீவு சோதனை நிலையம் என்பவற்றில் -

எம்பகுதியூடாக வடபகுதிக்குள் நுழைந்திருப்பினும் அவ்விடங்களில் வழங்கப்பட்ட வடபகுதிக்குள் நுழைவோருக்கான அனுமதிச் சீட்டுடன் அனுமதி வழங்கப்பட்ட செயலகத்திற்குச் சென்று பிணையை நீக்கிக் கொள்ளல் வேண்டும் என அறிவிக்கப்படுகிறது.

வயதுக்கட்டுப்பாடுப் உடையவர்களாயின் தேசிய அடை (6 ஆம் பக்கம் பார்க்க)

**சிமெந்து ஊழியர் விவகாரம்:**

## கொழும்பில் பேச்சு நடத்த அமைச்சர் சம்மதம்

யாழ்ப்பாணம், மே 27

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை ஊழியர்களின் பிரச்சினைகள் குறித்து வீடமைப்பு நிர்மாணத்துறை இட்ட அமைச்சர் திரு. சந்திரா ரணதுங்காவுக்கும், சிமெந்து பொதுத் தொழிலாளர் யூனியன் தூதுக்குழுவுக்கும் இடையில் அடுத்தமாதம் 8ஆம் திகதி கொழும்பில் பேச்சுவார்த்தைகள் நடைபெறவிருக்கின்றன.

சிமெந்துத் தொழிற்சாலையை மூடி, அங்கு பணியாற்றிய ஊழியர்களுக்கு நஷ்டஈடு வழங்க சிமெந்து கூட்டுத்தாபனம் எடுத்த முடிவு குறித்து பேச தமக்கு திகதி தருமாறு வீடமைப்பு (6 ஆம் பக்கம் பார்க்க)

# செயற்குழு உறுப்பினர்களில் பலரை பதவி விலகுமாறு கோருகிறார் டி.பி.

## தமக்கு தேவையானோரை நியமிப்பதற்கு திட்டம்

கொழும்பு, மே 27

ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களில் பெரும்பாலானோரைப் பதவி விலகும்படி ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா கோரியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

தமது விசுவாசிகளை கட்சியின் செயற்குழுவில் நியமித்து அதன் மூலம் கட்சியில் தமது பிடியை மேலும் இறுக்குவதற்கு திரு. விஜேதுங்கா இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கட்சியின் கொள்கை வகுக்கும் அமைப்பாக செயற்குழு உள்ளது.

கட்சியின் வருடாந்த மாநாட்டில் குறிப்பிட்ட எண்ணிக்கையினர் செயற்குழுவில் இடம்பெற தெரிவு செய்யப்படுகின்றனர்.

கட்சியின் தலைவர் என்ற முறையில் ஜனாதிபதி மேலும் 50 பேரை தமது சொந்த விருப்பைப் பயன்படுத்தி செயற்குழுவில் நியமிப்பார்.

இவ்வாறு நியமிக்கப்பட்ட செயற்குழு உறுப்பினர்களையே பதவி விலகும்படி திரு. விஜேதுங்கா கேட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த செயற்குழுக் கூட்டம் எதிர்வரும் ஜூன் மாதம் முற்பகுதியில் நடைபெறவிருக்கிறது.

அதற்கு முன்பதாக புதிய உறுப்பினர்களை செயற்குழுவிற்கு நியமிக்கத் திட்டமிட்டு ஜனாதிபதி விஜேதுங்கா செயற்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (6 ஆம் பக்கம் பார்க்க)

**தேசியப் பட்டியல் மூலம் தெரிவான ஐ.தே.கவினர்!**

## விலக மறுக்கும் எம்.பிமாரை ஜனாதிபதி வெளியேற்றுவார்!

கொழும்பு, 27

தலைமைப்பீடத்தின் கட்டளையை ஏற்று பதவி விலக மறுத்து வரும் ஐ. தே. க. தேசியப்பட்டியல் எம்பிக்களை அகற்றுவதற்கு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தயாராகிவருவதாக தெரிய வருகிறது.

தேசியப்பட்டியல் எம்பிக்களை அகற்றி விட்டு புதியவர்களை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு கட்சித் தலைவர் என்ற முறையில் இருப்பதாக கட்சியின் பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகரா தெரிவித்திருக்கிறார்.

திரு. விஜேதுங்கா தமக்குள்ள அதிகாரத்தை பிரயோகிக்க விரும்பாத ஒருவர் என்றும் —

அதனால் தான் அவர் தமது 'கட்டளை'யை கடிதவில் நண்பர்களாக ஏற்றுக் கொள்ளும்படி தேசியப்பட்டியல் எம்பிக்களின் மனமாற்றுவதில் ஈடுபட்டு வந்துள்ளார் என்றும் டாக்டர் விஜேசேகரா தெரிவித்திருக்கிறார்.

தாங்கள் அகற்றப்பட்டால் அதனை எதிர்த்து நீதிமன்றம் செல்லும் உரிமை தேசியப் பட்டியல் எம்பிக்களுக்கு உண்டு என்றும் அவர் ஒப்புக் கொண்டார். (6 ஆம் பக்கம் பார்க்க)

## செல்லச்சாமி — சந்திரசேகரன் புதிய கூட்டணி அமைக்க முயற்சி?

கொழும்பு, மே 27

எதிர்வரும் ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களுக்கு முன்பதாக மலையகத்தில் புதிய அரசியல் அணி ஒன்று உருவாகும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திரு. பெ. சந்திரசேகரன் தலைமையிலான மலையக மக்கள் முன்னணியுடன் சேர்ந்து புதிய அரசியல் அணி அமைக்கும் எண்ணத்துடன் ராஜாங்க அமைச்சர் எஸ். செல்லச்சாமியின் தலைமையிலான இ.தொ.கா. பிரிவு செயலாற்றி வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உட்பூசலில் செல்லச்சாமிக்கு ஆதரவளித்து வந்த ஜனாதிபதி விஜேதுங்கா தென் மாகாணசபைத் தேர்தலில் ஆளும் கட்சிக்கு ஏற்பட்ட தோல்வியை அடுத்து அமைச்சர் தொண்டமானுடன் தனது உறவைச் சீராக்கிக் கொண்டதும்—

அதனைத் தொடர்ந்து ஜனாதிபதியின் 'அரவணைப்பை' செல்லச்சாமி இழந்ததும் தெரிந்ததே.

காமினி திஸநாயக்காவுக்கு மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சி முக்கியத்துவம் கொடுக்க ஆரம்பித்துள்ளதைத் தொடர்ந்து ஆளும் கட்சி உயர் பீடத்தில் தொண்டமானின் செல்வாக்கு மீண்டும் கொடி கட்டிப் பறக்க ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் ஆளும் கட்சியினால் ஓரம்கட்டப்பட்டு வரும் செல்லச்சாமி இ.தொ.காவில் உள்ள தமது ஆதரவா (6ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போஷாக்கு நிறைந்த சத்துணவு

### ஜீவாகாரம்
### JEVAKARAM

இது முன் கூட்டியே தயாரிக்கப்பட்ட உப உணவாகும்.

★ வளர்ந்து வரும் குழந்தைகளுக்கும்
★ போஷாக்கு குறைவான குழந்தைகளுக்கும்
★ பாலூட்டும் தாய்மார்களுக்கும்
★ கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் உகந்தது.

கிடைக்குமிடம்:

### அண்ணா தொழிலகம்

இணுவில் / யாழ்ப்பாணம்,
திருநெல்வேலி.

(சி-8237)

---

## இதய அஞ்சலி

### அமரர் அம்பிகாபதி பாலசுந்தரம்

தலைவர், வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கம்
(உள்ளகக் கணக்காய்வாளர், நகரசபை, வவுனியா)

அன்னாரின் மறைவால் துயருறும் குடும்பத்தினருடனும், அவரது அரும் பெரும் சேவையை இழந்துள்ள எழுதுவினைஞர் சங்க சமூகத்தினருடனும் நாமும் மீளாத் துயரை பகிர்ந்து கொண்டு அமரருக்கு எமது இதய அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

செயலாளரும்,
எழுதுவினைஞர்களும்.

நல்லூர் பிரதேச சபை செயலகம்,
திருநெல்வேலி.

[சி-8335]

---

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்: 21 – 08 – 1956

அகிலாய அழிப்பில்: 19 – 05 – 1984

### அமரர் தம்பிராசா தெய்வேந்திரம்
(குட்டி)

அன்பின் சிகரமே!
அறிவின் பிறப்பிடமே!
குடும்பத்தின் குலவிளக்கே!
உனைப்பிரிந்து 10 ஆண்டுகள் ஓடி
மறைந்ததையா ஆண்டுகள் 10
ஓடி மறைந்தாலும் எம் துயர்
ஆறாதையா.

உன் பிரிவால் துயருறும்,
தாய், சகோதரம், உற்றார்,
உறவினர்கள்.

கொம்மாந்துறை,
வல்வெட்டித்துறை.

(31103)

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி



### அமரர் தூசைப்பிள்ளை சவிரிமுத்து
(இளவாலை)

மண்ணில்: 15 – 02 – 1919
விண்ணில்: 27 – 04 – 1994

திங்கள் ஒன்றாடி மறைந்தாலும், நீங்கள் என்றும் எங்கள் உள்ளத்தில் நிலைத்திருப்பீர்கள், ஆண்டுகள் பல மறையலாம். உங்கள் ஒளி முகம் மறையாதப்பா! உங்கள் நினைவுகள் என்றென்றும் எங்கள் இதயங்களில் நிலைத்திருக்கும். உங்கள் ஆசி எம்மை வழி நடத்தும்.

அன்னாரின் ஆத்ம இளைப்பாற்றிற்காக சங்கானை புனித சவேரியார் ஆலயத்தில் இன்று (27-05-1994) இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

அரசடி வீதி,
வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை.

[31121]

---

## முக்கிய அறிவித்தல்

யாழ். வணிகர் கழகம், யாழ். ஊழியர் சங்கம்,
யாழ். நகைத்தொழிலாளர் சங்கம்,
யாழ். ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கம்,
யாழ். பொதி சுமக்கும் தொழிலாளர் சங்கம்
இணைந்து விடுக்கும்

### முக்கிய அறிவித்தல்

சகல வணிகப் பெருமக்களையும், ஊழியர்களையும், நகைத்தொழிலாளர்களையும், ஆங்கில மருந்து வர்த்தகர்களையும், பொதிசுமக்கும் தொழிலாளர்களையும் 28 – 05 – 94 சனிக்கிழமை பிற்பகல் 2 30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவிருக்கும் விசேட பொதுக்கூட்டத்திற்கு தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அரசியல் துறையினரும் கலந்துகொள்வார்கள்.

கூட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து சகலரும் தவறாது கூட்டத்தில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.


நன்றி, வணக்கம்.

அனைத்து சங்கங்களின் நிர்வாகத்தினர்

(சி/8340)

---

## 41-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### அமரர் நா. த. செல்லத்துரை J. P.
(முன்னாள் உதவி முதல்வரும், பிரபல சமூக சேவையாளரும்)

தோற்றம்: 08 – 05 – 1918
மறைவு: 17 – 04 – 1994

ஆலமரமாய் எம் அனைவருக்கும் நிழல் தந்து, பாசத்துடன் எம்மை வளர்த்து, நேர்வழிகாட்டிய அன்புத் தந்தையின் இனிய ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (27-05-1994) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது அன்புத் தந்தையின் மறைவின் போது நேரில் வந்து அஞ்சலி செலுத்தியோர், அனுதாபச் செய்திகளை அனுப்பியோர், அஞ்சலிப் பிரசுரங்களை அச்சிட்டு வெளியிட்டோர், அஞ்சலிக் கூட்டத்தில் உரை நிகழ்த்தியோர், பல வழிகளிலும் உதவி புரிந்தோர் அனைவருக்கும் எமது அன்பு கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

"செல்ல மாளிகை",
5, யாழ். வீதி,
யாழ்ப்பாணம்.

[ ]

---

## இன்று

தெல்லிப்பழை ஆசிரியர் திரு. மு. கிருஷ்ணபிள்ளை ஒதுவாருக்கு 'அனுபூதிச் செம்மல்' எனும் சிறப்பு விருதை வழக்கம்பரை பஜனைச் சபையார் வழங்குகின்றனர். இன்று வெள்ளிக்கிழமை சுழிபுரம் பறாளை முருகன் ஆலயத்தில் நடைபெறும் கந்தரனுபூதி மனனப் போட்டி பரிசளிப்பு வைபவத்தின்போது விருது வழங்கப்படவுள்ளது.

[க-28]

★ ★ ★

யாழ்ப்பாணம், மே 27

பளை மகா வித்தியாலயத்தின் தமிழ்த் திறன் போட்டி இன்று வெள்ளிக்கிழமை வித்தியாலய அதிபர் திரு. க. புண்ணியசீலன் தலைமையில் நடைபெறும்.

★ ★ ★

மானிப்பாய், மே 27

மானிப்பாய் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க மகளிர் குழு நடத்தும் தையல் கண்காட்சி சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று வெள்ளி பிற்பகல் 3.00 மணிக்கு திருமதி புஸ்பராணி புவனேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

பனம் பொருள் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. சி. சபாரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

[இ-90]

★ ★ ★

தென்மராட்சி மே 27

அறவழி மழலைகள் கல்விப் பூங்கா ஆசிரியர்கள், மாணவர்களின் ஆக்கப் பொருள்களின் ஒன்றிணைந்த பொருட்காட்சி இன்று காலை 9.00 மணிக்கு கைதடி நுணாவில் பிரதான வீதியில் உள்ள தொழிற் பயிற்சி பயிலகத்தில் நடைபெறும்.

[இ-81-117]

★ ★ ★

தென்மராட்சி, மே 27

ஆதரவற்ற சிறார்களின் வளர்ச்சி நிதிக்காக நாவற்குழி வர்த்தகர் சங்கத்தினர் நடத்தும் இன்னிசை கானம் நிகழ்ச்சி இன்று வெள்ளி இரவு நாவற்குழி மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

(இ-117)

★ ★ ★

வடமராட்சி வடக்கு கடல் வளக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் திரு. ஆ. சிவசுவாமி தலைமையில் நடைபெறவுள்ளது.

[இ-173]

---


## 95 A/L
## PHYSICE

### திரு. ஜெயசீலன்
B. sc (Hons)

புதிய பகுதிக்குரிய
புதிய பிரிவு
ஆரம்பம்
29 – 05 – 94
ஞாயிறு 10 30 A.M.
மேலதிக விபரங்கள்
நிறுவனத்தில்

### SCIENCE COLLEGE
### விஞ்ஞானக் கல்லூரி

பெருமாள் கோவில் வீதி,
யாழ்.

(சி/8341)


---

## பத்தாம் ஆண்டு பன்னிரண்டாம் ஆண்டு
## நினைவஞ்சலி

அ
ம
ர
ர்
க
ள்



### கந்தப்பு ஸ்ரீபன் தேவராசா (தேவா)

மலர்வு: 22 – 08 – 1946
உதிர்வு: 27 – 05 – 1984



### கந்தப்பு ஸ்ரீபன் ஞானராசா (ஞானி)

மலர்வு: 09 – 08 – 1955
உதிர்வு: 29 – 05 – 1982

என் இரு கண்ணின் விழிகளே!
உங்கள் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

உங்கள் அம்மா.

ஸ்ரேசன் லேன்,
சாவகச்சேரி.

[30940]

---

## நன்றி நவிலல்

திருநெல்வேலி – சிவன்கோயில் வீதியில் பணத்துடனும், சிறப்புக் கோர்வையுடனும் நான் தவறவிட்ட கைப்பையைக் கண்டெடுத்துத் தந்துதவிய 334, கோயில் வீதியில் வசிக்கும்

### திரு. க. தனபாலசிங்கம்

அவர்களுக்கு மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இங்ஙனம்,
திருமதி சி. இராமநாதன்
அதிபர்

ஆசிரிய கலாசாலை,
கோப்பாய்.

(சி/8344)

---

## 16 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு: 27 – 02 – 1942



உதிர்வு: 13 – 05 – 1994

### திருமதி சரோஜா பிச்சையப்பா
(பிரபல நாதஸ்வர வித்துவான் பிச்சையப்பாவின் மனைவி)

அன்னாரின் இல்லத்தில் நாளை (28-5-94) சனிக்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்ச்சியிலும், தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும்வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

ஆத்மசாந்திக்குப் பிரார்த்திக்கும்
ரவி, ரஜி சகோதரர்கள்,
குடும்பத்தினர்

சட்டநாதர் கோயிலடி,
நல்லூர்.

(31125)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 08-04-1915

மறைவு: 27-04-1994

### அமரர் பொன்னம்பலம் சிவசம்பு
(1ஆம் வட்டாரம், மண்டைதீவு)

அன்பினால் எமை வளர்த்த அப்பு உங்கள் ஆசை முகம் கண்டு ஒருமாதம் கழிந்துவிட்டது. இன்பமாய் வாழ்ந்த காலம், சடினையற்ற பாசம் இனி எங்கு காண்போம். அன்பு மனைவி கதற, ஆசைப் பிள்ளைகள் அழுதிட கேட்குதோ உங்களுக்கு, எங்கள் உள்ளம் மகிழ்ந்திட வருவீர்களா? அப்பு.

திருமதி தங்கரத்தினம் குடும்பத்தினர்,

க. அருணாசலம் [மருமகன்]
திருமதி யூலி அருணாசலம் [மகள்]

(31129)

---

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 03 – 04 – 1930



மறைவு: 27 – 05 – 1987

### அமரர் அருளம்பலம் முத்துராஜா
(முன்னாள் உபதபால் அதிபர், தொண்டமனாறு)

திதி: 09 – 06 – 1994

அன்பின் பிறப்பிடமாய் பாசத்தின் உறைவிடமாய், கடமையே கண்ணாகக் கொண்டு தனியின் மேன்மையாய் விளங்கி எமக்கு நல்வழி காட்டிய உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி
பிள்ளைகள்.

செருடாவில்,
தொண்டமனாறு.

(31107).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புங்கன்குளம்

# வில்லையடி ஸ்ரீநாகபூஷணி அம்பாள்

## வருடாந்த பொங்கல் விழா சிறப்பிதழ்

27 - 05 - 1994

# பொங்கி அருள் சுரக்கும் புதுமை அன்னை

புத்தழகி பூவழகி புங்கன்குளக்காரி
எங்கும் பொங்குகடல் சூழ்ந்த நல்ல நாகபுரத்தாயி
வித்தகிநீ விரதகிநீ வேப்பமரக்காரி
எங்கும் வெவ்வினை தன் வேரறுக்கும் வில்வமரத்தாயி
வெத்திலையின் மேல்நடக்கும் வெள்ளைமனக்காரி
எங்கும் வெந்தணலைக் குளிர வைக்கும் அதிசயத்தாயி
அத்தையும்நீ அம்மையும்நீ அருளுனக்காரி
அம்மா வந்தெமக்கு அருள்புரிவாய் அடிசரண்தாயி!

## ஆசிச் செய்திகள்

சைவ செம்மனச் செல்வர்களே!

புங்கன்குளம், ஸ்ரீ நாகபூஷணி அம்பாளுக்கு பக்தி பூர்வமாக, விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெறுவதை அறிந்து பெரிதும் மகிழ்வுறுகிறோம்.

பராசக்தியாக, எமக்கெல்லாம் அன்னையாக எங்கள் பிழைகளை எல்லாம் பொறுத்துத் திருவருள் பாலிப்பவள் அவளே. எமது வாழ்வு செழித்து நாம் இன்புறத் தாயின் அன்பையும், ஆசிகளையும் பெற்றுவிட்டால் போதும். திரிகரண சுத்தியோடு. மனச்சிதறலில்லாமல் அம்பாளின் திருவடிகளை இறுகப் பற்றிக் கொண்டால், வேண்டியன வெல்லாம் அவள் ஈய்ந்தருளுபவள். இது அனுபவத்தில் கண்டு ஆனந்திக்க வேண்டியதொன்று. இங்கு அம்பாளின் கைங்கரியங்களெல்லாம் செவ்வனே நிறைவுறத் தொண்டுகள் புரியும் அன்பர்களைப் பாராட்டுகிறோம், 'வாழ்த்துகிறோம்.

எல்லோருக்கும் தேவியின் திருவருளை உளமார வேண்டி எமது மனமார்ந்த நல்லாசிகளை வழங்குகின்றோம்:

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

—ஸ்ரீலஸ்ரீ குருமஹா சந்நிதானம்.
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.

புங்கன் குளம் வில்லையடி ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய அபிஷேகம் தொடர்பாக மலர் வெளியிடப்படுவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

சமய வாழ்வு யாழ்ப்பாணத் தமிழர்களின் வாழ்வோடு ஒட்டியது. நாடும் நாமும் நல்வாழ்வு வாழ எல்லாம் வல்ல திருவருளின் சக்தியே துணை புரிகின்றது. ஆலயங்களில் காலத்துக்குக் காலம் செய்ய வேண்டிய திருப்பணிகளைச் செய்து நமது இம்மை மறுமை வாழ்வுக்கு வித்திடுவோமாக.

விழிக்கே அருளுண்ட பிராம வல்லிக்கு வேதஞ் சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்டெமக்கவ் வழி கிடக்கப்
பழிக்கேசுழன்று வெம்பாவங்களே செய்து பாழ்நரகக்
குழிக்கே யழுந்தும் கயவர்தம்மோடென்னகூட்டினியே.

—அபிராமிப்பட்டர்

கா. மாணிக்கவாசகர்
அரச அதிபரும், மாவட்ட ஆணையாளரும்,
யாழ். மாவட்டம்.

கொழும்புத்துறை மேற்கு வில்லையடி அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த பொங்கல், தீக்குளிப்பு நிகழ்வுகளையொட்டி வெளியாகும் மலருக்கு ஆசியுரை நல்குவதில் உவகையடைகிறேன்.

பழமை பாடி செழுமை தேடல் என்ற தமிழ் மரபுக்கேற்றவாறு அநாதியான கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் வேண்டுவோர்க்கு வேண்டும் வரமளித்து புதுமை, அற்புதங்களை நிகழ்த்தி வருவது நாமறிந்ததே.

அம்பாளின் ஆலயப் பணிகள் மேலோங்க வேண்டுமென வாழ்த்துவதோடு எம் அனைவரதும் துன்பங்கள் தீர்ந்து ஒளிமயமான எதிர்காலம் மிளிர அம்பாள் அருள்பாலிக்க வேண்டுமென அவளது திருவருளை வேண்டி என் நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

— வே. பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(31042)

பக்திப் பெருக்கும் தெய்வீக அம்சங்களும் நிறைந்து விளங்கும் பல ஆலயங்கள் யாழ். குடாநாட்டிற்கு பல பாகங்களிலும் நிலைமிட்டிருப்பதை நாம் அனைவரும் அறிவோம். நாட்டின் அமைதியற்ற சூழ்நிலைகள் காரணமாக பல திருத்தலங்களின் திருவிழாக்களும் பூசைகளும் வேறு வேறு இடங்களில் நடைபெறுவதும் அடியார்களின் நேர்த்திக்



கடன்கள் வேறு வேறு ஆலயங்களில் நிறைவேற்றப்படுவதும் நம் பிரதேச வழக்கமாகி விட்டது.

இந்த வகையிலே யாழ். குடாநாட்டின் புங்கன்குளப் பகுதியில் தோன்றி அருள் பாலிக்கும் அம்மன் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மனின் அருள் ஆட்சியேயாகும். ஆனால் இவ்வம்மனின் புங்கன்குள அருள் தோற்றம் நாட்டின் நிலையினால் ஏற்பட்டதொன்றன்று. இற்றைக்கு சுமார் இருபத்தெட்டு வருடங்களுக்கு முன்னரே அம்பாளின் அருட்பார்வை இவ்விடத்திலே தோன்றியிருப்பதை அடியார்கள் அறிந்து கொள்வார்கள்.

அழகிய பெரும் தெரு. அதனை அண்டியிருக்கும் ஓர் புனிதமான குச்சொழுங்கை. அறிவும் ஆற்றலும் தெய்வீகமும் நிரம்பியிருக்கும் மக்கள் சூழ்ந்த அயல் இத்தனைக்கும் நடுவிலே அமைந்திருக்கும். அற்புத மரத்தோப்புகள் இதிலேஉயர்ந்து ஓங்கி வளர்ந்திருக்கிறது. அம்மனுக்கு பிடித்தமான ஓர் வில்வமரம் இந்த மரத்தின் அடியிலே தான் அம்பாளின் வதிவிடம் தென்படலாயிற்று, அக்காலத்தில் இந்த வளவுக்குள் குடியிருந்த அடியவர்கள் அம்மனின் அருளையும் அருள் தோற்றத்தையும் அற்புதங்களையும் பல தடவைகள் கண்டு வியந்து தெய்வீக மேலீட்டினால் அந்த இடத்திலே சிறியதோர் ஆலயத்தை அமைத்து ஆதரிக்க முற்படலாயினர். காலப்போக்கிலே அயலவர்களும் அண்டி வாழ்பவர்களும் அம்பாளின் அற்புதங்களினால் அம்பாள் அடியார்களாயினர். யாழ். நகரிலே புங்கன்குளப் பகுதியிலே வில்லை மரத்தடியிலே அம்பாளின் வதிவிடம் மிகச்சிறியதானாலும் அம்பாளின் அற்புதங்களினால் இவ்வாலயம் தெய்வீக நிலையினால் மிக மிக மேலோங்கியுள்ளது குறிப்பிடத்தக்க விடயம்.

இவ் ஆலயத்திற்குள் பிரவேசித்ததும் அடியார்களுக்கு ஏற்படுகின்ற உணர்ச்சிவச நிலை அம்பாளை தரிசிக்க வரும் போது காணக் கூடிய அற்புதக் காட்சிகள். அம்பாளுக்கு பூசைக்காக அடியார்கள் கொண்டு வந்து வைக்கின்ற பால், பழங்கள், மலர்கள் மறைந்து விடுகின்ற தன்மை, அடியார்களின் நடமாட்டம் இல்லாத போது இங்கே நடக்கின்றதோர் இனந்தெரியாத தெய்வீக நடமாட்டம். அம்பாளுக்கு செய்கின்ற நேர்த்திக்கடன்களினால் நோய், பிணி, தோஷங்கள் நீங்கிவிடும் தன்மை, அத்தனைக்கும் மேலாக அம்பாளுக்கு முன்னால் வளர்க்கப்பட்டிருக்கும் தீக்குளம் பின் மேல் அடியார்கள் ஆரவாரமின்றி அமைதியாக நடந்து செல்லும் தெய்வீகம் என்பன அம்பாள் இவ் ஆலயத்திலே விரும்பி உறைகின்ற தன்மை வெளிப்படுத்துகின்றன.

அம்பாளின் வருடாந்த பொங்கல் தினம் இன்று வெள்ளிக்கிழமையாகும். அடியார்கள் அனைவரும் யாழ். நகரின் புங்கன்குளம் பகுதியிலே வில்லையடியிலே அமர்ந்து அருள் பாலிக்கும். நயினை நாகபூஷணி அம்பாளின் அருள் பெரும் தோற்றத்தை அணுகி பேரருள் பெற்று உய்வார்களாக!

மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

★


அம்பாளின் திருவருளை
இறைஞ்சுகின்றோம்

### முருகன் றேடேஸ்
மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

### துர்க்கா விற்பனை நிலையம்
211, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
★ விற்பனையாளர் - எவர்சில்வர் மணிக்கூடு அழகுசாதனப் பொருள்கள் மற்றும் அன்பளிப்பு பொருள்கள்

### யோ. சிவா
இல. 70-72, பழக்கடை,
நவீன சந்தை உட்புறம்,
யாழ்ப்பாணம்.
★ எல்லா வகையான பழங்களும் பெற்றுக்கொள்ளலாம்

### செந்தாமரை (றிக்கோ) குளிர் தடாகம்
370, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.



### 'A' LEVEL CENTRE
1St. LANE POINT-PEDRO ROAD,
JAFFNA.

விசேட சிங்கள வகுப்பு
ஆரம்பம்: 28-05-1994
சனி-ஞாயிறு 12.00
ஆசிரியர்: பியதாச
[கி-8435]


## முக்கிய அறிவித்தல்

தெல்லிப்பளை
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரையுள்ளது)

28 - 05 - 1994 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற இருந்த பின்வரும் கிளைகளுக்கான கிளைக் குழுத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.

கிளை 1 தெல்லிப்பளை
கிளை 14 கொல்லங்கலட்டி
கிளை 26 மயிலிட்டி வடக்கு
கிளை 29 வீமன்காமம்

எ. சின்னத்தம்பி,
தேர்தல் உத்தியோகத்தர்.

1994 - 05 - 26
மாவிட்டபுரம்.

[கி-8334]

## புலிகளின் குரல் வானொலியில்

27 - 05 - 1994
வெள்ளி இரவு

★ 8-01 — கலைமஞ்சரி - முதலில் நூல் அறிமுகம். அறிமுகமாவது வெளிச்சம். வெள்ளி இதழ் அடுத்து சிறுகதை - புதிய காற்று சிறுகதையை அடுத்து கவிதைகள்
1. நாமும் போவோம் களம் நோக்கி
2. கொடிமுடி
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — அரசியல் அரங்கம் "மாயாதேவியும் மகாத்மா காந்தியும்"
★ 8-50 — வாத்திய கானங்கள்

28 - 05 - 1994
சனி காலை

★ 7-02 — காவிர வணக்கம்
★ 7-15 — நீங்கள் கேட்டவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — நேயர் விருப்பம்: நீங்கள் கேட்டவை.

## உங்கள் பாதுகாப்பை நீங்களே உறுதி செய்யுங்கள்

### கல்குடா சிங்கள மீனவருக்கு அறிவுரை

கொழும்பு, மே, 26

கல்குடாவில்வாழும் பெரும்பான்மை தமிழ் பேசும் மக்களுடன் புரிந்துணர்வுடன்பழகி உங்கள் பாதுகாப்பை நீங்களே உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள் என்று அங்கு வாழும் 47 சிங்களக் குடும்பங்களுக்கும் மட்டக்களப்பு மாவட்ட இராணுவ இணைப்பதிகாரி ரொஹான் குணவர்த்தனா தெரிவித்துள்ளார்.

"நீங்கள் வாழும் பகுதிக்கு மட்டும் தனியான பாதுகாப்புத் தரமுடியாது" —என்றும் அவர் அச்சிங்களக் குடும்பங்களுக்குக் கூறியுள்ளார்.

(உ-எ)


உ
யாழ்ப்பாணம்
### வண்ணை வைத்தீஸ்வரன் கோயில்
(சிவன் கோயில்)
### ஏகதின இலட்சார்ச்சனைப் பெருவிழா

28 - 05 — 1994 சனிக்கிழமை காலை 6-00மணி தொடக்கம் இலட்சார்ச்சனை ஆரம்பமாகி மாலை 2-00 மணி வரை நடைபெறும். தொடர்ந்து சங்காபிஷேகம் நடைபெற்று, மாலை 5-30 மணியளவில் சுவாமி திருவீதி உலா இடம்பெறும். அன்பர்கள் அனைவரும் விழாவில் கலந்து இறையருள் பெற்றுய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இங்ஙனம்,
வை. கந்தப்ப செட்டியார்,
ஆலய தர்மகர்த்தாவும், உரிமையாளரும்.
[81101]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

உரும்பிராய் சந்தியில் பிரதான பாதை அருகே அமைந்திருக்கும் 4 பரப்புக்காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: அ. சமலசேகரம் (நில அளவையாளர்), உரும்பிராய் சந்தி, உரும்பிராய். (7214)

சண்டிக்குளி தெற்கு, கந்தர்மடம், திருநெல்வேலி வீடு தளபாடங்களுடன் விற்பனைக்கு அல்லது வாடகைக்கு உண்டு. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். (31116)

## இறைச்சிக் கோழி

புறொயிலர் 160/- இறைச்சிக் கோழி 150/- சனி, ஞாயிறு காலை 8-00 மணி முதல் 11-00 மணி வரை. சுத்தம் செய்து கொடுக்கப்படும். (28/5, 29/5 மட்டும்) 382, சென்ற் ஜூட் மோட்டேர்ஸ், (வெலிங்டன் சந்தி), மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (31115)

## 94-ம் ஆண்டு இராசி பலன்

இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட 12 ராசிகளுக்கும் ஒரே புத்தகமாக விற்பனையாகின்றது. சொற்ப பிரதிகள் மட்டும் கைவசம் உண்டு. உங்கள் பிரதிக்கு முந்துங்கள். சனா றேடர்ஸ், திருநெல்வேலிச் சந்தி. (சி-8330)

## மணிக்கூடு திருத்துதல்

சகல மணிக்கூடுகளும் உத்தரவாதத்துடன் குறைந்த செலவில் திருத்திக் கொடுக்கப்படும். உதிரிப்பாகங்களுக்காக மணிக்கூடுகள் வாங்கப்படும். குடும்ப அட்டையுடன் வரவும். சஜன்ஸ் வாச் வேக்ஸ், 12, புகையிரத நிலைய வீதி, சுன்னாகம் சந்திக்கருகில். (7413)

## பரீட்சை வழிகாட்டி

க. பொ. த. சாதாரணதர மாணவர்களுக்கான சரித்திரப் பரீட்சை வழிகாட்டி வினா-விடை நூல் வெளிவந்து விட்டது. தொகுப்பு: இராஜகிருஷ்ணர் இரகுநாதன் வெளியீடு: ஸ்ரீசுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம். (7417)

## O/L கணிதம்

ஆரம்ப அறிவிலிருந்து Distinction பெறுபேறுடைய 27 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லேடீ மேந்திரா வீதி, சுண்டிக்குளி. (7415)

## தவறிவிட்டது

25-5-94 அன்று முருகண்டியில் எனது K0294144 இலக்க கடவுச்சீட்டு, கொழும்பு, மஸ்கற் சென்றதற்கான விமான பயணச்சீட்டு அடங்கிய கைப்பை தவறிவிட்டது: கண்டெடுத்தவர்கள் S. சக்திவேல், மே/பா R. சிவகுருநாதன், சிரணி சந்தி, சண்டிலிப்பாய் என்ற விலாசத்தில் ஒப்படைத்து தகுந்த சன்மானம் பெற்றுக் கொள்ளவும். (31117)

கிளாலிக் கரையில் 25-5-94 இல் ஒரு பிரயாணப்பை தவறிவிட்டது. அதற்கு பதிலாக வேறொரு பிரயாணப்பை மாறி வந்துள்ளது. உரியவர் அதனைப் பெற்று மாறி எடுத்த பையைத் தந்துதவும்படி கேட்டுக் கொள்கின்றேன். கி. கிருஷ்ணபிள்ளை தொட்டியடி, சங்கானை. (31120)

## வறுமை நிவாரண உணவு முத்திரை

யாழ்ப்பாணம், மே 27

யாழ். பிரதேச செயலாளர் பிரிவில் 8 ஆவது தொடர் வறுமை நிவாரண உணவு முத்திரைகள் அடுத்த மாத நடுப்பகுதியில் வழங்கப்படலாமென தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் இருந்து எடுத்து வரப்பட்ட வறுமை நிவாரண உணவுமுத்திரைகள் தற்சமயம் தரம்பிரிக்கப்பட்டு எழுதப்பட்டு வருகின்றன. (ச-17

---

விடுதலைப் புலிகள்
கலை, பண்பாட்டுக் கழகம்
நடத்தும்

# கரும்புலிகள் நாளையொட்டிய அரங்க விழாவும், கிராமிய ஆட்ட கலை விழாவும்

05-07-1994 அன்று நடைபெறவிருக்கும் கரும்புலிகள் நாளையொட்டி விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் மாவட்டங்கள் மட்டத்தில் நடத்தவிருக்கும் இப்போட்டிகளில் கலந்து கொள்ளும் அமைப்புகள், தனிநபர்களுக்கான விதிமுறைகளை கீழே வகைப்படுத்தித் தருகின்றோம்.

சகல போட்டிகளுக்குமான விண்ணப்பங்களும், கோட்ட மட்டத்திலான விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழக செயலகங்களில் 02-06-1994 க்கு முன்னதாக நேரில் கையளிக்கப்பட வேண்டும்.

## அரங்க வகைகளும் போட்டி விதிமுறைகளும்

1. பாரம்பரிய அரங்க முறைமைகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் நாடகங்கள். உதாரணமாக கூத்து, இசைநாடகம், வரலாற்று நாடகம், இலக்கிய நாடக வடிவங்களைக் கொண்டவையாக இவை அமையும்.
2. நவீன அரங்க முறைமைகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் நாடகங்கள். உதாரணமாக இயல்புநெறிவாதம், யதார்த்தவாதம், மோடிமை, குறியீட்டுத்தன்மை கொண்டவையாக இவை அமையும்.

## பொது அறிவுறுத்தல்கள்

1. கலை வடிவங்களின் கருப்பொருள் சமகாலப் பிரச்சினைகள், நிகழ்வுகளை பொட்டியதாகவும், கலை பரிசம் நிறைந்ததாகவும் எமது விடுதலைப் போரை முன்னெடுத்துச் செல்வதாகவும் அமைதல் வரவேற்கத்தக்கது.
2. நாடகம் 45 நிமிடங்கள் கொண்டதாக இருத்தல் வேண்டும். (ஐந்து நிமிட விலக்கல் மட்டும் அனுமதிக்கப்படும்.)
3. (அ) சிறந்த நடிகர்
   (ஆ) சிறந்த நடிகை
   (இ) சிறந்த நெறியாள்கை
   (ஈ) சிறந்த எழுத்துரு
   (உ) சிறந்த இசையமைப்பு
   (ஊ) சிறந்த வேடப்புனைவு
   என்பவற்றிற்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும்.

## சிறுவர் அரங்கு

சிறுவர்களின் வயதிற்கும் உளவளர்ச்சிக்கும் அமைவாகக் கருப்பொருள் அமைய வேண்டும்: அத்துடன் நாடக அளிக்கையில் சிறுவர்களே பங்குகொள்ள வேண்டும். பின்னணி வாத்தியக் கருவிகளை மட்டும் பெரியோர் கையாளலாம்.

## பொது அறிவுறுத்தல்கள்

(அ) நாடக அளிக்கையில் ஆறு தொடக்கம் பன்னிரண்டு (6—12) வயது வரையுள்ள சிறுவர்கள் கீழ்ப்பிரிவிலும், 13 தொடக்கம் 17 வயது வரை உள்ளவர்கள் மேற்பிரிவிலும் அடங்குவர்,

(ஆ) கீழ்ப்பிரிவு நாடகம் 20 நிமிடங்கள் கொண்டதாக அமைதல் வேண்டும். 2 நிமிட விலக்கல் மட்டும் அனுமதிக்கப்படும்)

(இ) மேற்பிரிவின் நாடகம் 30 நிமிடங்கள் கொண்டதாக அமைத்தல் வேண்டும். (5 நிமிட விலக்கல் மட்டும் அனுமதிக்கப்படும்)

(ஈ) சிறுவர் நாடகங்களை பாடசாலைகளோ, தனிநபர்களோ, அமைப்புக்களோ தயாரிக்கலாம்,

(உ) நாடகங்களில் பங்கேற்கும் சிறுவர்களின் வயதெல்லையை பாடசாலைகளாயின் பாடசாலை அதிபர்களும், தனிநபர் தயாரிப்பு அல்லது அமைப்புக்களின் தயாரிப்புக்களாயின் அப்பகுதி கிராம சேவகரும் உறுதிப்படுத்த வேண்டும்.

(ஊ) நாடக அளிக்கையில் பங்குகொள்ளும் சிறுவர்களின் எண்ணிக்கை 15க்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

## கிராமிய ஆட்டக் கலைப் போட்டிகள்

1. கோலாட்டம்
2. கரகம்
3. ஆட்டக்காவடி
4. கும்மி

## பொது அறிவுறுத்தல்கள்

(அ) இவை ஒவ்வொன்றும் 10 நிமிடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

## ✲ குறிப்பு

(அ) ஒவ்வொரு போட்டியிலும் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று தெரிவுகளுக்கும் பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படும்.

(ஆ) நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது,

(இ) தயாரிப்புக்களுக்கான செலவுகளையும், போக்குவரத்துக்கான செலவுகளையும் தயாரிப்பவர்களே பொறுப்பேற்க வேண்டும். மாவட்ட மட்டத்திலான போட்டிகளுக்குத் தெரிவு செய்யப்படும் தயாரிப்புகளுக்கான போக்குவரத்து வசதிகளை விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் பொறுப்பேற்கும்.

(ஈ) மேடையேற்றப்படாத புதிய நாடகங்களும், கிராமிய ஆட்டக் கலைகளும் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

(உ) மேலதிக விபரங்களைப் பெற விரும்புவோர் அந்தந்த கோட்டக் கலை, பண்பாட்டுக் கழகச் செயலகங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

விடுதலைப் புலிகள்
கலை, பண்பாட்டுக் கழகம்,
நடுவப் பணியகம்,
தமிழீழம்,

---

# 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 02 — 08 — 1966

மறைவு: 27 — 05 — 1987

## அ. பிரேமகுலசிங்கம் (பிறை)

திதி: 09 — 06 — 1994

ஏழாண்டுகள் மறைந்தாலும்
உன் எழில் வதனம்
எம் இதயங்களை விட்டு மறையவில்லை.

என்றும் உன் பிரிவால் வாடுகிறோம்;
அழகையா குடும்பத்தினர்.

கொம்மந்தறை,
வல்வெட்டித்துறை. (31102)

---

# 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 22 — 08 — 1946

உதிர்வு: 27 — 05 — 1984

## அமரர் க. ஸ்ரீபன் தேவராஜா

நிலத்தில் புதைந்தாலும் நெருப்பில் எரிந்தாலும் உங்கள் பொன் உருவம் என்றும் அழியாது.

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு, மீளாத் துயில் கொள்ளும் எங்கள் அன்பு அப்பாவே! உங்களை உயிர் உள்ளவரை மறவோம்.

பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி,
பிள்ளைகள்.

இல. 7, கற்குளி ஒழுங்கை,
சாவகச்சேரி. (7391)

---

இப்போட்டிகளில் பங்குபற்றும் போட்டியாளர்கள் கீழ்வரும் மாதிரிப் படிவத்தை பூர்த்தி செய்து விண்ணப்பிக்கவும்.

விடுதலைப் புலிகள்
கலை, பண்பாட்டுக் கழகம்
நடத்தும்

# கரும்புலிகள் நாளையொட்டிய அரங்க விழாவும் கிராமிய ஆட்டக் கலை விழாவும் விண்ணப்பப்படிவம்

1) பங்குபற்றும் அமைப்பின் பெயர்:
..........................................................................
..........................................................................

2) முகவரி:
..........................................................................
..........................................................................
..........................................................................
..........................................................................

3) கோட்டத்தின பெயர்:
..........................................................................
..........................................................................

4) நாடகத்தின் தன்மை:
அ: ..........................................................................
ஆ: ..........................................................................
இ: ..........................................................................
ஈ: ..........................................................................

5) கிராமிய ஆட்டக்கலை:
அ: ..........................................................................
ஆ: ..........................................................................
இ: ..........................................................................
ஈ: ..........................................................................

இப்போட்டிகளின் விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டு மேற்படி போட்டிகளில் கலந்து கொள்ளுகின்றேன் என்பதை அறியத்தருகின்றேன்.

..........................................................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்

(சி-8307)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
192/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## வீறுகொண்டு எழுவது எப்போது?

பணம் பாதாளம் வரை பாயும் — என்பது ஒரு பேச்சு வழக்கு வாசகம். அதனைப் பணம் போர் வரையும் பாயும் என்று மாற்றிக் கூறினும் பொருந்தும் காலம் இது.

வடக்கு - கிழக்கில் உள்ள யுத்த முனைகளில் இருந்து நவீன ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துப் பொருள்கள் கொழும்புக்குக் கடத்தப்படுகின்றன. பெருமளவில் அவ்வாறு கடத்தப்படும் ஆயுதங்களைக் கொண்டு கொழும்பில் ஒரு சந்தையே நடக்கிறது. கொழும்பின் அந்த ஆயுதச் சந்தையில் தாராளமாக விற்கப்படும் நவீன ரக ஆயுதங்களை ''பாதாள உலக'' மரணப்படைகள் — குழுக்கள் — போட்டி போட்டுக்கொண்டு வாங்குகின்றன.

பொலிஸ் விசாரணைகளில் இருந்து வெளிவந்துள்ள இரகசியங்கள் இவை.

வடக்கு - கிழக்கு வாழ் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு அரசாங்கம் இங்கு நடத்தும் யுத்தம் எவ்வாறு உயிராபத்து நிறைந்ததோ, அது போலவே தென்னிலங்கை வாழ் சிங்கள மக்களுக்கு அரசாங்கத்தின் பெரும் புள்ளிகளின் ஆசியுடன் — சில வேளைகளில் அவர்களின் ஆதரவுடனும், அனுசரணையுடனும் — இயங்கும் மரணப்படைகளின் செயற்பாடுகள் உயிராபத்தானவையாகும்.

மிகக் குறிப்பாக ஆளுங்கட்சிக்கு எதிரானவர்கள், அரசினைச் சேர்ந்த அரசியல்வாதிகளால் குறி வைக்கப்பட்டவர்களின் உயிர்களை பாதாள உலகத்தைச் சேர்ந்த மரணப்படையினர் தாராளமாகப் பறித்து வந்தனர்.

வடக்கு - கிழக்கில் தமிழர்களை, நிராயுதபாணிகளான அப்பாவிப் பொதுமக்களை, அரச படைகள் கொன்றால் அது குற்றமல்ல. கொலை செய்யும் படையினருக்கு தண்டனையிலிருந்து சட்ட ரீதியாக விதிவிலக்களிக்கப்பட்டுள்ளது!

அதே போல, தென்னிலங்கையில் அரசியல் விரோதம் காரணமாகவோ தனிப்பட்ட குரோதம், பகைமை காரணமாகவோ அப்பாவிச் சிங்கள மக்களைக் கொல்லும் மரணப்படையினரும் அரசியல்வாதிகளின் அல்லது பொலிஸாரின் செல்வாக்கைப் பயன்படுத்தித் தண்டனையில் இருந்து விலக்குப் பெற்று விடுகின்றனர்.

இந்தத் தகவல்கள் காட்டி நிற்கும் உண்மைகள் என்ன?

சிங்கள, தமிழ் மக்களின் வரிப்பணத்தைக் கொண்டு பெரும் செலவில் ஆயுதங்களை வாங்கும் அரசு, தமிழர்களை மட்டுமன்றிச் சிங்களவர்களையும் அந்த ஆயுதங்களால் கொன்றொழிக்கிறது!

வடக்கு-கிழக்குப் போருக்கு மேலும் நவீன ஆயுதங்கள் தேவை என்று வாய் ஓயாது கூறி, உலகின் பல்வேறு ஆயுதச் சந்தைகளில் அவற்றை வாங்கும்போது அரசியல், இராணுவ உயர் மட்டத்தினர் தரகு என்ற பெயரில் பல கோடி ரூபா பணத்தைச் சேர்க்கின்றனர். அவர்களில் இன்னொரு கூட்டத்தினர் ஆயுதக் கொள்வனவில் லஞ்சம் பெற்றுப் பணம் தேடுகின்றனர்!

இவ்வாறு பலருக்குப் பெருவருமானம் கொடுக்கும் ஆயுதங்கள் யுத்தமுனைகளுக்கு வந்த பின்னர் கொழும்புக்குக் கடத்திச் செல்லப்பட்டு, களவாடப்பட்டு மீண்டும் ஒரு குழுவினருக்கு இங்கு வருவாய் தேடிக் கொடுக்கின்றன!

மொத்தத்தில் போர் என்பது அரசியல்வாதிகளுக்கும், இராணுவ அதிகாரிகளுக்கும் இங்கு வருவாய் தரும் தொழிலாக உருவெடுத்திருக்கிறது! அவர்களுக்கு வருவாய் தருகிறது என்பதால் யுத்தமும் நீடிக்கப்படுகிறது. தமிழர்களும், சிங்களவர்களும் எவ்வித கேட்டுக் கேள்வியும் இன்றிக் கொன்று குவிக்கப்படுகிறார்கள்.

சிங்களவரின் அரசாங்கம், சிங்களவரின் பணத்தைக் கொண்டே, சிங்களவரைக் கொல்லும் உண்மை தெரிந்த பின்னரும், அவர்கள் அரசுக்கு எதிராக வீறு கொண்டு எழுவது எப்போது? தமது மரணத்துக்கு உடந்தையாகும் யுத்தத்தை உடனே நிறுத்துமாறு கிளர்ந்தெழுவது எப்போது? தேர்தல்வரை காத்திருக்கப் போகிறார்களா?

# பாதாள உலக கிரிமினல்களுடன் செயற்பட்ட 5 அரசியல்வாதிகள்

## கைகோர்த்து இயங்கினராம்

கொழும்பு மே 27

ஐந்து முன்னணி அரசியல்வாதிகள் 'பாதாள உலக'க் கிரிமினல்களுடன் 'கைகோர்த்து' செயற்பட்டுள்ளனர் என்பது பொலிஸ் விசாரணையில் வெளிவந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குற்றங்களைப் புரிந்துவிட்டு கிரிமினல்கள் தப்பி ஓடுவதற்கு உதவியும் ஒத்தாசையும் இந்த அரசியல்வாதிகளால் வழங்கப்பட்டு வந்தன என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பொலிஸாரினால் தேடப்பட்டு வந்த ஒரு கிரிமினல் நாட்டைவிட்டுத் தப்பி ஓடுவதற்கு உயர் நிலை அரசியல்வாதி ஒருவர் துணை புரிந்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இரு அரசியல்வாதிகளுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்ததாகக் கூறப்படும் இரண்டு முக்கிய கிரிமினல் நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பின் சுற்றுப்புறத்தில் இடம்பெற்ற இரு கொலைகள் தொடர்பாக பொலிஸார் நடத்தி வந்த விசாரணைகள் அரசியல் தலையீடு காரணமாக கைவிடப்பட்டன என்றும் கூறப்பட்டது.

பாதாள உலக நபர்களுடன் அரசியல்வாதிகள் கொண்டுள்ள விரும்பத்தகாத உறவுகளினால் பொலிஸார் தங்களின் கடமைகளைச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

## மேசை விளக்கு அன்பளிப்பு

வட்டுக்கோட்டை அரசினர் வைத்தியசாலை வார்ட்டுகளில் உபயோகிப்பதற்கு நான்கு மேசை விளக்குகளை அராலி மேற்கு ராஜன் கதிர்காமர் பொதுப்பணி விளையாட்டுக் கழகத்தினர் வழங்கியுள்ளனர். (க-161)

## புத்தளத்தில் "வொய்ஸ் ஒவ் அமெரிக்கா" ஒலிபரப்பு நிலையம்:

# ஆசிய நாடுகளின் யுத்த இரகசியங்களை அமெரிக்கா பெற ஸ்ரீலங்கா உதவுகிறது

புத்தளம் இரணவிலவில் அமைக்கப்பட்டு வரும் "வொய்ஸ் ஒவ் அமெரிக்கா" ஒலிபரப்பு நிலைய கட்டட வேலைகளை மத்திய அரசாங்கம் நிறுத்த வேண்டும் எனக்கோரும் பிரேரணை மேல்மாகாண சபையில் கடந்த வியாழனன்று நிறைவேற்றப்பட்டது.

"வொய்ஸ் ஒவ் அமெரிக்கா" ஒலிபரப்பு கட்டடத்தை அமைக்க இலங்கையில் இடமளிப்பதன் மூலம் ஆசிய நாடுகளின் யுத்த இரகசியங்களை அமெரிக்கா தெரிந்து கொள்ள நாம் ஒத்துழைப்பு வழங்குகிறோம் என்று கூறி மேல்மாகாண சபை அங்கத்தவர் ஏ. டபிள்யூ. லீலாரத்னா கொண்டு வந்த பிரேரணையே கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

எமது அண்டை நாடான இந்தியா மற்றும் ஜப்பான், பாகிஸ்தான், ஈரான் உட்பட அனைத்து நாடுகளிலும் ஒலிபரப்பக்கூடிய பாரிய நவீன இயந்திரங்கள் அந்த ஒலிபரப்பு நிலையத்தில் பொருத்தப்படவுள்ளன. அத்துடன் சம்பந்தப்பட்ட நாடுகளின் யுத்த இரகசியத்தை வெளியிட இந்த ஒலிபரப்பு நிலையம் பயன்படுத்தப்படும்.

— இவ்வாறு திரு. லீலாரத்னா தெரிவித்தார்.

மேல்மாகாண சபை உறுப்பினர் பேர்சி குணதிலக பேசிய போது —

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் யுத்தம் ஒன்று நடைபெற்றுக் கொண்டிருக்கையில், நாம் இந்தியாவைப் பகைத்துக் கொள்ள முடியாது. இந்தியாவைப் பகைத்துக் கொண்டு நாம் வடக்கு - கிழக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரவும் முடியாது. பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் "வொய்ஸ் ஒவ் அமெரிக்கா" கட்டட நிர்மாண வேலைகளை நிறுத்துவோம் — என்றார். (உ-5)

# புலிகள் மீதான தடை நீடிப்பு ஜெயலலிதாவுக்கு வெற்றியாம்

## அவரே கூறுகின்றார்

சென்னை, மே 27

"தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை மத்திய அரசு நீடித்திருப்பது தமிழக அரசுக்கும் எனக்கும் கிடைத்த வெற்றியாகும்."

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா இவ்வாறு தெரிவித்துள்ளார். கடந்த 19ஆம் திகதி பெருந்துறையில் நடந்த கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையில் இப்படி அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

எனது கட்சியோ அல்லது நானோ தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு எதிராக இருக்கவில்லை. ஆனால் ராஜீவ் காந்தியின் படுகொலைக்குப் பின்னர் அந்த இயக்கம் இந்தியாவின் இறைமைக்கும், ஒருமைப்பாட்டுக்கும் ஓர் அச்சுறுத்தல் என நிரூபிக்கப்பட்ட போதே நான் அந்த இயக்கத்தை எதிர்த்தேன்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடையை நீடிக்க வேண்டும் என நான் விரும்பினேன். ஆனால் நான் திரும்பத் திரும்ப கோரிக்கைகளை விடுத்த போதிலும் மத்திய அரசு அதனைத் தாமதப்படுத்தியது.

கடைசியாக தடை நீடிக்கப்பட்டுவிட்டது. நான் விடுதலைப் புலிகளை களைந்தெறிந்துவிட்டு ஸ்திரமான அரசைப் பேணுகிறேன் — என்றார். (உ-5)

# பட்டதாரி நேர்முக பரீட்சை அடுத்த வாரத்தில் நடக்கும்

யாழ்ப்பாணம், மே 27

பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்காக இன்றும் நாளையும் யாழ். செயலகத்தில் நடைபெறவிருந்த நேர்முகப்பரீட்சைகள் அடுத்த வாரம் நடைபெறும் என்று யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் அறிவித்திருக்கிறார்.

புதிய திகதி விண்ணப்பதாரர்களுக்குக் கடித மூலம் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொள்கைத் திட்டமிடல் அமைச்சிலிருந்து நேர்முகப் பரீட்சை வழிகாட்டல்கள் இன்னும் கிடைக்காமையினால் தான் குறிப்பிட்ட நேர்முகப் பரீட்சைகள் ஒத்திப்போடப்பட வேண்டியதாயிற்று என்றும் அரச அதிபர் தெரிவித்திருக்கிறார்.

வேறு மாவட்டங்களில் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்க வேண்டியவர்களும், அம்மாவட்டங்களுக்கு போக முடியாதவர்களும், பயிற்சிக்கு விண்ணப்பித்திருந்தும் கொள்கைத் திட்டமிடல் அமைச்சின் கடிதம் கிடைக்காதவர்களும் மாவட்டச் செயலக திட்டமிடல் பிரதிப் பணிப்பாளருடன் உடனே தொடர்பு கொள்ளும்படியும் யாழ். அரச அதிபர் கோரியுள்ளார்.

## திருஞானசம்பந்தர் குருபூசை

யாழ்ப்பாணம், மே 27

சமயகுரவர் நால்வரில் ஒருவரான திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரின் குருபூசைத்தினம் இன்றாகும். இதனையொட்டி குடாநாட்டில் உள்ள இந்து ஆலயங்களிலும், சமய மற்றும் பொது நிறுவனங்களிலும், பாடசாலைகளிலும் பல்வேறு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

வண்ணை வைத்தீஸ்வரர் ஆலயத்தில் காலையில் சம்பந்தருக்கு விசேட பூசை அபிடேகங்கள் நடைபெற்று மாலை 5 மணிக்கு உற்சவம் இடம்பெறும்.

கொண்டாவில் ஸ்ரேசனடி அதிபதீஸ்வரர் ஆலயத்தில் உள்ள ஸ்ரீ பார்வதி சைவ முன்னேற்றச் சங்கத்தில் இன்று பிற்பகல் 5-30 மணிக்கும் —

சைவபரிபாலன சபையுடன் இணைந்து மாணவர் கல்விக் கழகம் நடத்தும் நிகழ்வுகள் இன்று காலை 10 மணிக்கும், மாலை 3 மணிக்கும் —

ஆனைக்கோட்டை இந்து சமய விருத்திக் கழகத்தின் சம்பந்தர் குருபூசை நிகழ்ச்சி காசிஸ்ண்டமடம் சிவன் கோயிலில் மாலை 5 மணிக்கும் —

ஆனைக்கோட்டை இளைஞர் சங்கத்தின் ஏற்பாட்டில் பிற்பகல் 4-30 மணிக்கு மூத்த விநாயகர் கோயிலிலும் —

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தின் ஞானசம்பந்தர் குருபூசை நிகழ்ச்சி காலை வைபவங்கள் நல்லூர் சட்டநாதர் சிவன் கோவிலிலும், மாலை வைபவங்கள் கந்தர்மடம் ஆத்திசூடி வீதி ஸ்ரீ சித்தி விநாயகர் கோயிலிலும் —

சரசாலை இந்து மன்றத்தின் குருபூசை நிகழ்ச்சிகள் நுணுவில் ஸ்ரீ சிதம்பர விநாயகர் கோயிலிலும் சிறப்பாக நடைபெறவுள்ளன.

திருஞானசம்பந்தர், திருநீலகண்டர், யாழ்ப்பாண நாயனார், திருநீலநக்கர், திருமுருகநாயனார் ஆகியோரின் குருபூசை நினைவு விழா இன்று காலை 9 மணிக்கு யாழ். சிறாம்பியடி திருவாசகமன்றத்தில் நடைபெறவுள்ளது. [உ-5]

## குளம் ஆழமாக்கல்

கொழும்புத்துறை மேற்கில் உள்ள இலந்தைக்குளம் யாழ். மாநகராட்சி மன்றத்தால் ஆழமாக்கப்பட்டு வருகின்றது. மழை நீரை தேக்கி வைக்கும் நோக்கமாகவே இக்குளம் ஆழமாக்கப்பட்டு வருவதாக யாழ். மாநகர ஆணையாளர் தெரிவித்தார். (க-17)

# மக்களின் அவலங்களைப் போக்க மததலைவர்கள் என்ன செய்தனர்

## விவேகானந்தரின் சிந்தனைகள் விடுக்கும் சவால்

யாழ்ப்பாணம், மே 27

தமிழ் மக்கள் தமது வாழ்க்கை அவலங்களைப் போக்குவதற்காகவே, விடுதலை வேண்டி நிற்கிறார்கள். அவர்களின் அந்த அவலங்களைப் போக்குவதற்கு சமயத் தலைவர்கள் என்ன செய்தார்கள்?

மக்களை ஒற்றுமைப்படுத்தி சமாதான சகவாழ்வுக்கு உதவவேண்டும் என்று எல்லா மதங்களும் போதிக்கின்றன. ஆனால் இலங்கையில் உள்ள நான்கு மதங்களின் தலைவர்களும் ஒன்றுபட்டு உழைத்து சமாதானத்தையும், அமைதியையும் உருவாக்கினார்களா?

சுவாமி விவேகானந்தரின் சிக்காக்கோ பிரசங்கத்தை நினைவுபடுத்திச் சிந்திக்கும் போது, மேற்கூறிய கேள்விகள் எமக்கு முன்னே உள்ள சவால்களாக விளங்குகின்றன.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். மறை மாவட்ட குருமுதல்வர் அருட் தந்தை கலாநிதி எஸ். ஜே. இம்மானுவேல்.

திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயம் நடத்தும் சுவாமி விவேகானந்தர் சிக்காக்கோ பிரசங்க நூற்றாண்டு விழாவின் முதல் நாள் நிகழ்ச்சிகள் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் நடைபெற்றன. அங்கு உரையாற்றுகையிலேயே அருட் தந்தை இம்மானுவேல் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இராமகிருஷ்ணாலயத்தின் இயக்குநர் திரு. இ. ராஜா மகேந்திரசிங்கம் விழாவுக்குத் தலைமை வகித்தார்.

அருட் தந்தை இம்மானுவேல் தமது உரையில் மேலும் குறிப்பிட்டதாவது:-

நூறு ஆண்டுகளுக்கு முன்னர், சிக்காக்கோ சர்வமத மாநாட்டில் சரித்திரப்பிரசித்தி பெற்ற உரையை ஆற்றிய சுவாமி விவேகானந்தர் மதங்களுக்கு இடையே சமரசம் நிலவவேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார்.

மக்கள் நல்வாழ்வுக்காகவும், ஆன்மீக ஈடேற்றத்துக்காகவும் மதத் தலைவர்கள் ஒன்றுபட்டு உழைக்கவேண்டும் என்பது அவரது கருத்தாக இருந்தது.

சமயங்கள், மதத் தலைவர்கள் மக்களை நெருங்கிச் சென்று உழைக்க வேண்டும். ஆனால் இவை எல்லாம் செயல்ரீதியாக நடைமுறைக்கு வந்திருக்கின்றனவா? இத்தகைய கேள்விகள் எங்கள் முன் பெரும் சவால்களாகவே உள்ளன.

எனவே விவேகானந்தரை நினைவுகூரும் நாம், அவர் தெரிவித்த கருத்துக்களின் சவால்களை எதிர்கொண்டு, அவரது விருப்பத்தை நிறைவேற்ற உழைக்க வேண்டும்— என்றார்.

தென்னிந்திய திருச்சபையின் பிரதிநிதியாகக் கலந்து கொண்ட அருட்திரு டானியல் எஸ். தியாகராசா பேசுகையில் கூறியதாவது:

மதங்கள் மனிதனை மாண்புள்ளவனாக ஆக்குவதற்கு உதவவேண்டும்; வேற்றுமையில் ஒற்றுமை காணும் பணியை மதத்தலைவர்கள் நடைமுறைப்படுத்திக் காட்டினாலே மக்களும் அதனைக் கைக்கொள்வார்கள். மதங்களிடையே — மதத்தலைவர்களிடையே — புரிந்துணர்வு இருந்தால் தான் மக்களிடையேயும் புரிந்துணர்வு உண்டாகும்.

இன்றைய போர்க்கால சூழ்நிலையில் அவலப்படும் மக்களுக்கு உதவுவதற்கு மதத் தலைவர்கள் அவர்களைத் தேடிச்செல்ல வேண்டும். மக்களின் மனத்தாக்கங்களை இனங்கண்டு, அவற்றிலிருந்து விடுபடுவதற்கு உதவவேண்டும்— என்றார்.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பேசுகையில் கூறியதாவது:

விவேகானந்தர் ஒரு வீரத்துறவி. ஆன்மீகத்திலும் வீரம் வேண்டும் என்பதனை தாமே கடைப்பிடித்துக் காட்டியவர்.

இன்றைய சூழ்நிலையில், அகதிகளாக மாறி நலிந்து போனவர்களுக்கும், போரினால் அனாதை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளவர்களுக்கும் உதவுவது எமது பொறுப்புகளில் ஒன்று. அவர்களுக்கு மனித நேயத்துடன் உதவிக்கரம் நீட்ட வேண்டும். அந்த உதவி பல வழிகளிலும் அமையலாம்.

விவேகானந்தர் விரும்பிய எழுச்சியும், செயற்திறனும் இப்போது மீண்டும் எமது சமூகத்துக்குத் தேவைப்படுகின்றன— என்றார்.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்கினார்.

வட இலங்கை சர்வோதய அறங்காவலர் திரு. க. திருநாவுக்கரசு, ஆசிரியமணி திரு. ஆர். ஜி. சுப்பிரமணியம் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

விழா ஆரம்பமாவதற்கு முன்னர் சுவாமி விவேகானந்தரின் திருவுருவப்படம் ஊர்வலமாக எடுத்துவரப்பட்டது. வழி நெடுகிலும் மகரதோரணங்கள் கட்டி, பூரணகும்பம் வைத்து மக்கள் சுவாமியின் திருவுருவப்படத்துக்கு மலர்மாலைகள் சாத்தி வணங்கினர். பாடசாலை மாணவ, மாணவிகளின் பான்ட் இசை, காவடியாட்டம் சகிதம் சுவாமிகளின் திருவுருவப்படம் அழகிய தேரில் வைத்து இழுத்து வரப்பட்டது. [அ]

## ஜனாதிபதித் தேர்தல்:

# ஐ. தே. க. வெற்றி பெற இரு ஆலோசனைகள்

## விக்கிரம வீரசூரியா தெரிவிப்பு

கொழும்பு, மே 26

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியை தவிர்ப்பதற்கு இரண்டு காரியங்கள் நிறைவேற்றப்பட்டாக வேண்டும் என்று கொள்கை திட்டமிடல் மற்றும் அமுலாக்கல் அமைச்சுச் செயலாளர் விக்கிரம வீரசூரியா தெரிவித்தார்.

முதலாவது —

காமினி, றொனி டிமெல், காமினி ஜயவிக்கிரம பெரேரா ஆகியோரை ஐக்கிய தேசியக் கட்சி அரசில் சேர்ப்பதில் வெற்றி காணவேண்டும்.

அடுத்தது —

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சிறிமாவோ பண்டாரநாயக்கா தான் என்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும்—.

இவ்விரண்டும் நிறைவேற்றப்பட்டால் மட்டுமே அடுத்த தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியினால் வெற்றியீட்ட முடியும் என்றும் திரு. வீரசூரியா தெரிவித்திருப்பதாக ''ராவய'' செய்தி வெளியிட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரசாரங்களுக்கு டாக்டர் விக்ரம வீரசூரியாவே பொறுப்பாக இருக்கப் போகிறார் என்பது தெரிந்ததே. (உ-எ-6)

# நிதி அமைச்சை தம்வசம் வைத்திருக்க டி.பி.விஜேதுங்க

கொழும்பு, மே 27

நிதி அமைச்சகத்தைத் தமது பொறுப்பிலேயே தொடர்ந்து வைத்திருக்க ஜனாதிபதி விஜேதுங்க முடிவு செய்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சரவையில் எந்த மாற்றங்கள் செய்யப்பட்டாலும்—

முக்கியமான நிதி அமைச்சை இன்னொருவரிடம் கையளிப்பதில்லை என்று ஜனாதிபதி முடிவு செய்துள்ளார் என்றும்—

எதிர்வரும் செப்டம்பர் 26 முதல் 28ஆம் திகதிவரை மோல்டாவில் நடைபெறவிருக்கும் பொதுநலவாய அமைப்பு நாடுகளின் நிதி அமைச்சர்கள் மாநாட்டில் தமது சார்பில் நிதி ராஜாங்க அமைச்சர் ஹரோல்ட்ஹேரத் கலந்து கொள்வார் என்று அறிவித்திருப்பதன் மூலம் ஜனாதிபதி தமது இம்முடிவை வெளிப்படுத்தியுள்ளார். என்றும்—

அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள "டெய்லி நியூஸ்" பத்திரிகைச் செய்தி வெளியிட்டிருக்கிறது.

நிதி அமைச்சராக இருக்கும் திரு ஹரோல்ட் ஹேரத்தை மோல்டா மாநாட்டின் பின்னர், மாட்ரிட் நகரில் நடைபெறும் உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய சபை ஆகியவற்றின் வருடாந்த மாநாடுகளிலும் தமது சார்பில் கலந்து கொள்ள ஜனாதிபதி நியமித்திருக்கிறார்.

மோல்டா நிதி அமைச்சர் ஜோன்டலிக்கு அனுப்பிய கடிதம் ஒன்றில்—

எதிர்வரும் அக்டோபர் அல்லது நவம்பரில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறவிருப்பதன் காரணமாக பொதுநலவாய அமைப்பு நிதி அமைச்சர்கள் மாநாட்டில் தம்மால் கலந்துகொள்ள முடியாமல் இருப்பதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

தமது சார்பில் திரு. ஹரோல்ட் ஹேரத் கலந்து கொள்வார் என்றும் அக்கடிதத்தில் ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார். (உ-எ)

# கலாசார உறவுகள் பற்றிய ஆய்வு காலத்தின் தேவை

## நூல் வெளியீட்டு விழாவில் உரை

கொழும்பு, மே 27

சமயங்களுக்கு இடையேயான உறவுகள், கலாசாரங்களுக்கு இடையேயான உறவுகள் சம்பந்தமான ஆய்வுகளும் கருத்துப் பரிமாற்றங்களும் இன்றைய காலத்தில் முக்கிய தேவைகளாகி விட்டன.

அந்தவகையில் "தமிழ்ப் பண்பாட்டில் கிறிஸ்தவம்" என்ற நூல் காலத்தின் தேவை அறிந்து வெளிக்கொணரப் பட்டுள்ளமை பாராட்டுக்கு உரியதாகும்.

இவ்வாறு தெரிவித்தார் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞானக் கல்வித் துறைத் தலைவர் பேராசிரியர் சோ. சந்திரசேகரம்.

யாழ். பல்கலைக்கழக கிறிஸ்தவ மன்றம், கலாநிதி ஏ. ஜே. வி. சந்திரகாந்தனைத் தொகுப்பாசிரியராகக் கொண்டு வெளியிட்ட 'தமிழ்ப் பண்பாட்டில் கிறிஸ்தவம்'' என்ற நூலின் வெளியீட்டு விழா இம்மாதம் முற்பகுதியில் கொழும்பில் நடைபெற்றது.

அந்த விழாவில் ஆய்வுரை நிகழ்த்தும் போதே பேராசிரியர் சந்திரசேகரம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வெளியீட்டு விழா, கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா தலைமையில் நடைபெற்றது.

தமிழர் கலாசாரம், கிறிஸ்தவமதம் ஆகிய இரண்டும் தொடரான வரலாறும், இலக்கிய மரபும் நிறைந்தனவாகும் ஆகையால் அவை குறித்து ஆராய்வது என்பது இலகுவானதல்ல.

இந் நூலில், பேராசிரியர் சிவத்தம்பியும், கலாநிதி சந்திரகாந்தனும் 'தமிழ்ப் பண்பாட்டிற்கும் கிறிஸ்தவத்துக்கும் உள்ள உறவுகளை ஒழுங்கு சீரமைந்த படிமுறையில் தமது ஆய்வுகளை நிகழ்த்திச் செய்கின்றனர் — என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

பேராசிரியர் செ. சிவஞானசுந்தரமும் (நந்தி) ஆய்வுரை நிகழ்த்தினார். பேராசிரியர் கா. சிவத்தம்பி நூலை அறிமுகம் செய்து வைத்தார். கிறிஸ்தவ தேசிய பண்பாட்டுப் பேரவையின் முன்னாள் தலைவர் அருட்செல்வி பெனடிக்ரா பஸ்தியாம்பிள்ளை வாழ்த்துரை வழங்கினார். (அ)

# கொலைகள் பல புரிந்து தப்பி ஓடிய சிப்பாய் கைது

## சகாவான தமிழரும் பிடிபட்டார்

கொழும்பில் இடம்பெற்ற பல கொலைகள் தொடர்பாக இராணுவத்தில் இருந்து தப்பி ஓடிய சிப்பாய் ஒருவரையும் அவரது சகாவான தமிழர் ஒருவரையும் கொம்பனித்தெரு பொலிஸார் கடந்த வாரம் கைதுசெய்தனர் என்று அறிவிக்கப்படுகிறது.

கொம்பனித்தெரு வாசியான அந்தச் சிப்பாயை கடவத்தையில் வைத்து பொலிஸார் பிடித்தனர்.

கைதான தமிழர் தமது மோட்டார் சைக்கிளில் பிரஸ்தாப சிப்பாயை ஏற்றிக்கொண்டு செல்லும் போது அவர் துப்பாக்கியால் சுட்டு கொலைகள் பல புரிந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# பெண் துணை வேண்டிய ஆணே பொன்னும் பொருளும் ஏன் கேட்கிறாய்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். றோட்டறிக் கழகம் முக்கிய அறிவித்தல்

சகல இன்ரறக்ட் கழகத் தலைவர்களுக்கும்

உங்கள் கழகத்தின் 94/95 ஆம் ஆண்டு காலப் பகுதிக்குரிய உறுப்பினர்களின் பெயர்ப் பட்டியலை அதிபர் மூலம் உறுதிப்படுத்தி இன்று மாலை 3 மணிக்கு முன் கிடைக்கக்கூடியதாக பின்வரும் ஏதாவது ஓர் முகவரியில் சேர்ப்பிக்கவும்.

உத்தியோகபூர்வ கடிதங்கள் அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

1) உதயன் பணிமனை
2) இராணி மாளிகை.
கே. கே. எஸ். வீதி,
இணுவில்.

Rtn. தி. திருநந்தகுமார்
செயலாளர் 94/95

(இ-8384)

# கண்ணீர் அஞ்சலி

புனித பத்திரிசியார் கல்லூரி ஆசிரியரும்
எமது கல்வி நிறுவனத்தின் சமூகக்கல்வி
ஆசிரியருமான

திரு. பிரான்சிஸ்
அவர்களின்
பாசமிகு தந்தையார்

## தோமஸ் அன்ரனி பேர்னாண்டோ

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்ப அங்கத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை கண்ணீர் அஞ்சலி ஆக்குகின்றோம்.

நிர்வாகி, ஆசிரியர்கள்
மாணவர்கள்
ஸ்ரார் சயன்ஸ் சென்றர்
அரியாலை

(31124)

# மரண அறிவித்தல்கள்

## சின்னர் சுப்பிரமணியம்

கந்தர்மடத்தை பிறப்பிடமாகவும் அம்மன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னர் சுப்பிரமணியம் 26 – 5 – 94 இல் காலமாகிவிட்டார் இவர் காலம்சென்ற கனகம்மாவின் அன்புக் கணவரும், சோதிஸ்வரி (லண்டன்) Dr. சத்தியலட்சுமி (அவுஸ்திரேலியா), டரமேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், காலம்சென்ற சண்முகநாதன், செல்லத்துரை (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், ராதிகா, சங்கீதா, லக்ஸ்மன், கிஷானி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்தில் இருந்து தகனக் கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு இன்று [27 - 5 - 94] காலை 10 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
சிவப்பிரகாசம் சரோஜினிதேவி
இல. 5 அம்மன் வீதி,
கந்தர்மடம். (31119)

## கந்தையா தருமலிங்கம்

(முன்னாள் அரச ஒப்பந்தகாரரும், மறவன்புலோ சாவலயத்கரை வீரகத்திப் பிள்ளையார் ஆலய நிர்வாகியும்)

மறவன்புலோ கந்தையா தருமலிங்கம் நேற்று (26-5-94) அமரராகிவிட்டார்.

அன்னார் பாக்கியத்தின் அன்புக் கணவரும், சுந்தரலிங்கம் (ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்), புவனேஸ்வரி, கைலேஸ்வரி, வள்ளிநாயகி (மருத்துவ உதவியாளர், மட்டக்களப்பு), கனகமணி, செந்தில்நாதன் (தேசிய சேமிப்பு வங்கி யாழ்ப்பாணம்) ஆகியோரின், அன்புத் தந்தையும், பஞ்சலிங்கம் (சவுதி), கந்தசாமி (ஓய்வுபெற்ற C T B. உத்தியோகத்தர்), காலஞ்சென்ற சர்வபரிபாலன், லோ நாதன் (யாழ் மாநகரசபை) திருமதி. ள் பொன்னம்மா (கரவெட்டி), சசிகலாதேவி (நீர்வேலி) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (27 - 5 - 94) வெள்ளிக்கிழமை பி. ப. 2 மணியளவில் மணற்காடு மயானத்தில் நடைபெறும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த. செந்தில்நாதன்
மறவன்புலோ,
சாவகச்சேரி. (31128)

## துரைரட்ணம் செல்வக்குமரன்

(செல்லக்குட்டி)

(முன்னாள் யாழ். தொண்டமனாறு வீரகத்திப் பிள்ளை மகாவித்தியாலய மாணவனும் தற்போது யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி வணிகத்துறை மாணவனும்)

தொண்டமனாறு செல்வச்சந்நிதியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், துரைரட்ணம் (முன்னாள் பருத்தித்துறை பல நோ. கூ. சங்க கிளை முகாமையாளர்) அரியமலர் ஆகியோரின் அன்பு மகனுமான செல்வக்குமரன் 25-5-94 இல் அகால மரணமானார்.

இவர் றஞ்சினி, கணேஸ்வரன் (பருத்தித்துறை பல.நோ. கூ. சங்க ஊழியர்), சிவனேஸ்வரன் (கனடா). ஜெயந்தாதேவி, ஜெயக்கணேஸ் கார்த்திகேயன் ஆகியோரின் சகோதரனும், தங்கவடிவேல், இராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் அகலியா, கயானந்தி, ஆகியோரின் மாமனாரும், தர்சினியின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் ஈமச்சடங்குகள் 26-5-94 அன்று பிற்பகல் 2-00 மணிக்கு தொண்டமனாறு ஆத்து மயானத்தில் நடைபெற்றன.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்:
யோகப்பிரகாஷன்
செல்வச்சந்நிதி,
தொண்டமனாறு. [7215]

# தபால்களை இன்று சேர்க்க கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 27

இன்று செல்லும் 'பிளாம் பயான்' கப்பலில் தபால் பொதிகள் அனுப்பப்படவுள்ளதால் தபால்களை இன்று காலை 10 மணிக்கு முன்னர் யாழ்ப்பாணம் பிரதம தபாலகத்தில் உள்ள தபால் பெட்டியிலும்—

நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் பருத்தித்துறை தபாலகத்திலும்— சேர்க்குமாறு யாழ். பிரதம தபாலதிபர் திரு. செ. சோமஸ்வரன் கேட்டுள்ளார். [இ-173-3]

# துணைவேந்தருக்கு இன்று வரவேற்பு விழா

யாழ்ப்பாணம், மே 27

யாழ். பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தராக நியமனம் பெற்றுள்ள பேராசிரியர் க. குணரத்தினத்தை கௌரவிக்கும் வரவேற்பு விழா இன்று பிற்பகல் 3 30 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவிருக்கிறது.

பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் திரு. ச. க. தனேந்திரன் தலைமையில் நடைபெறும் இவ்வரவேற்பு விழாவில் பதிவாளர் திரு. க பரமேஸ்வரன், பேராசிரியர் அ. சண்முகதாஸ், திரு. எஸ். சசிதரன், திரு. க. இரத்தினசபாபதி ஆகியோர் உரையாற்றுவார்கள்.

துணைவேந்தர் பதிலுரை நிகழ்த்துவார். (இ-3)

# பிளாம்பயான்

கொழும்பில் சிகிச்சை பெற்றவர்களுடன் இன்று காலை பருத்தித்துறைக்கு வந்து சேரும் 'பிளாம் பயான்' கப்பல் கொழும்பு செல்லும் அவசர நோயாளர்களுடன் மாலையே திருகோணமலைக்கு திரும்பிச் செல்லும்;

யாழ் அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகரும் இக்கப்பலில் கொழும்பு செல்கிறார்.

வழமைபோல் இக்கப்பல் சேவை நேற்று நடைபெறவில்லை. (ஒ-3-173)

# தென்மராட்சியில் மழை

நீண்டநாள் வரட்சியின் பின்னர் நேற்று காலை தென்மராட்சிப்பகுதியில் இடிமுழக்கத்துடன் கூடிய மழை பெய்தது (இ-117)

# சிமெந்து ஊழியர் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், மே 27

1988- 89 ஆம் ஆண்டுகளில் வேலை செய்து ஓய்வு பெற்ற காங்கேசன் சிமெந்து தொழிற்சாலை ஊழியர்களின் கஷ்டநிவாரண கொடுப்பனவுகள் இன்று காலை 9,00 மணி முதல் நண்பகல் 12. 00மணி வரை யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் உள்ள தொழிற்சாலை காரியாலயத்தில் வழங்கப்படும்.

## செயற்குழு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது கட்சியின் செயற்குழு உறுப்பினர்களாக உள்ள அமைச்சர்கள் சிறிசேனகூரே, காமினி அத்துக் கோறளை ஆகியோரை மீண்டும் ஜனாதிபதி நியமிக்கமாட்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-எ-6)

## விலக மறுக்கும்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டாச.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸா தேசியப் பட்டியல் எம். பிக்களை நியமித்த போது விதித்த நிபந்தனைகளையும் டாக்டர் விஜேசேகரா நினைவு படுத்தினார்.

ஆண்டு தோறும் அவர்களின் சாதனைகளைப் பொறுத்தே எம்பியாக இருப்பதற்கு சேவை நீடிப்பு வழங்கப்படும் என்ற அடிப்படையிலேயே, பிரேமதாஸா தேசியப் பட்டியல் எம். பிகளை நியமனஞ் செய்தார் என்றும் அவர் சொன்னார்.

வருடாந்த சுழற்சி அடிப்படையில் தான் விஜேதுங்காவை பிரதமராக பிரேமதாஸா நியமனஞ் செய்தார் என்றும்—

பிரேமாவின் பின்னர் ஜனாதிபதியாகும் வரை விஜேதுங்கா தமது சாதனையால் பிரதமராக நீடித்து வந்தார் என்றும் டாக்டர் விஜேசேகரா கூறினார்.

எம். பிக்களுக்கான நல்லொழுக்கக் கோவையை ஒவ்வொரு எம்பியும் கடைப்பிடிக்க வேண்டும் என்றும்—

இதன்படி கட்சித் தலைவர் எடுக்கும் முடிவை எவரும் எதிர்க்க முடியாது என்றும் ஐ. தே. க. வட்டாரங்கள் தெரிவித்தன.

# தேர்தல் பிரசார வேலை சந்திரிகா தலைமையில்

ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களின் போது பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் சார்பில் தேர்தல் பணிகளை தலைமை வகித்து நடத்தும் பொறுப்பு திருமதி சந்திரிகா குமாரணதுங்காவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சுதந்திரக் கட்சியின் உத்தியோகபூர்வ வட்டாரங்களை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் வானொலி இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

எதிர் வரும் தேர்தல்களின் போது, சகல மாவட்டங்களிலும் முன்னணியின் தேர்தல் பணிகளை ஒருங்கிணைத்து வழிநடத்துவதில் திருமதி சந்திரிகா குமாரணதுங்கா ஈடுபடுவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் நடைபெற்ற தென்மாகாணசபைத் தேர்தலின் போது முன்னணியின் தேர்தல் நடவடிக்கைகளை வெற்றிகரமாக சந்திரிகா மேற்கொண்டிருந்தார் என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-எ-6

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம் கல்வி வலயம் – I இனைச் சேர்ந்த பாடசாலைகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று பிற்பகல் 2 45 மணி முதல் சுண்டுக்குழி மகளிர் கல்லூரியில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 17 வயதுப் பிரிவு:- யாழ். இந்து மகளிர் எதிர் வேம்படி மகளிர் மற்றும் கொக்குவில் இந்து எதிர் காரைநகர் தியாகராஜா ம. ம. வி.

★ 19 வயதுப் பிரிவு:- கனகரத்தினம் ம. ம. வி. எதிர் வேம்படி மகளிர்.

★ ★ ★

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையே யாழ். மாவட்ட பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக் குழு நடத்திவரும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று பிற்பகல் 3 மணி முதல் முத்துத்தம்பி ம. வி. மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 19 வயதுப் பிரிவு:- புத்தூர் சோமஸ்கந்தா எதிர் சென் ஜோன்ஸ் மற்றும் கனகரத்தினம் ம. ம வி. எதிர் அச்சுவேலி ம. வி.

★ 17 வயதுப் பிரிவு:- மத்திய கல்லூரி எதிர் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.

★ ★ ★

யாழ். ஐங்கரன் விளையாட்டுக் கழகம் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள கழக மைதானத்தில் நடத்தி வரும் சுற்றுப் போட்டிகளில் இன்று மாலை 4 மணிக்கு நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

மென்பந்து கிரிக்கெட்

★ சிற்றம்பலம் வி.க. எதிர் வீனஸ் வி.க.

கரப்பந்தாட்டம் (ஓவர்)

★ ஊர்காவற்றுறை ப. நோ. கூ. எதிர் கலைமதி வி.க. "பி"

## பாடசாலைகளில்

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 1. 30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் திரு. து சந்தோசம் தலைமையில் நடைபெறும். (இ-5)

★ ★ ★

யாழ். ககாதாரத் திணைக்களத்தின் உதவியுடன் இலைக்கஞ்சி தயாரிப்பது தொடர்பான பயிற்சி வகுப்பு இன்று காலை 8. 30 மணிமுதல் கின்னர் ஒழுங்கையில் உள்ள புங்குடுதீவு மேற்கு அமெரிக்கன் மிஷன் வித்தியாலயத்தில் நடைபெறும்.

பாடசாலை மாணவர்களின் பெற்றோர்களுக்காக இந்தப் பயிற்சி வகுப்பு நடத்தப்படுகிறது. (இ-5)

★ ★ ★

தென்மராட்சி, மே 27

கொடிகாமம் யோக்கட்டி றோமன் கத்தோலிக்க பாடசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று பிற்பகல் 2. 30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும். முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்விக்கோட்ட பிரதிப்பணிப்பாளர் திருமதி புஷ்பா கணேசலிங்கம் கலந்து கொள்வர் (இ-117)

## கொழும்பில...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிர்மாணத்துறை அமைச்சர் சிறிசேன கூரேயை சிமெந்து பொதுத் தொழிலாளர் யூனியன் முன்னர் கேட்டிருந்தது.

தற்சமயம் பிரஸ்தாப அமைச்சின் திட்ட அமைச்சர் திரு. சந்திரா ரணதுங்கா யூனியனுடன் பேசுவதற்கு சம்மதம் அளித்துள்ளது.

எதிர்வரும் 8 ஆம் திகதி கொழும்பில் நடைபெறும் இப்பேச்சின்போது தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பல தரப்பட்ட பிரச்சினைகள் குறித்து விரிவாக ஆராயப்படவிருக்கிறது. (ஒ-3)

## போக்குவரத்து...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாள அட்டை இல்லாத பட்சத்தில் தாம் அனுமதி பெறும் போது அனுமதி வழங்கும் செயலகத்தினால் உறுதிப்படுத்தப்பட்டு வழங்கப்பட்ட புகைப்படத்தை சோதனை நிலையத்தில் ஒப்படைத்து விட்டுச் செல்ல வேண்டும்.

மீளவும் வடபகுதிக்குள் நுழையும்போது அப்படத்தை மீளப் பெற்று அப்படத்துடனும் வடபகுதிக்குள் நுழைவோருக்கான அனுமதிச்சீட்டுடனும் அனுமதி வழங்கப்பட்ட செயலகத்திற்கு சென்று பிணையை நீக்கிக் கொள்ளல் வேண்டும்

வடபகுதிக்குள் நுழைவோருக்கான அனுமதிச் சீட்டு, புகைப்படம் என்பவற்றை எடுத்து வராததினால் பிணை நீக்குவதில் ஏற்படும் சிரமங்களை தவிர்த்துக்கொள்ளுமாறு பொதுமக்களின் கவனத்திற்கு போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் அறியத் தருகின்றனர் [ஒ]

## செல்லச்சாமி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளர்களுடன் மலையக மக்கள் முன்னணியுடன் சேர்ந்து புதிய அரசியல் அணி ஒன்றை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

எனினும் அப்படியான முயற்சிகள் மேற்கொள்ளப் படவில்லை என்று திரு சந்திரசேகரன் மறுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# வடகோவை ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி கோயில்

கோப்பாய்

"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"

## வருடாந்த மகோற்சவ பூர்த்தி-1994

ஆலய வருடாந்த மஹோற்சவம் 15 - 05 - 1994 முதல் 25 - 05 - 1994 வரை சித்திர வேலவன் திருவருளால் இனிது நடைபெற்றது. மேற்படி விழா சிறப்படைய அரும் பங்காற்றிய ஆலயக் குருக்கள் பிரம்மஸ்ரீ பூரண கீதச்சந்திரக் குருக்கள் ஏனைய குருக்கள்மார், உபயகாரர்கள், தொண்டர்கள் மற்றும் அனைவர்க்கும், இரதோற்சவத்தின் போது நேர்முக வர்ணனையும் சிறப்புச் சொற்பொழிவும் ஆற்றிய திரு. கனகசபாபதி நாகேஸ்வரன் (எம்.ஏ.) அவர்களுக்கும் பரிபாலன சபையினர் தமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றனர்.

மகோற்சவ தொடராக 27-05-1994 வெள்ளிக்கிழமை பகல் நடைபெறும் மகேஸ்வர பூசையிலும், மாலை 5-00 மணிக்கு நடைபெறவுள்ள வைரவர் மடையிலும் அடியார்கள் கலந்து இறையருள் பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம்.

நன்றி!

- பரிபாலன சபையினர்.
கோப்பாய். [31123]

# தொழில் நுட்ப உத்தியோகத்தர் பதவி: அமைய அடிப்படையில் 40 பேருக்கு உடன் நியமனம்

யாழ்ப்பாணம், மே 27

யாழ் மாவட்டத்தில் 40 தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் அமைய அடிப்படையில் உடன் நியமிக்கப்படவிருக்கின்றனர்.

யாழ். மாவட்டத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களை நியமிப்பதற்காக நடத்தப்பட்ட போட்டிப்பரீட்சையில் தோற்றியவர்களில் இருந்தே இந்த நியமனம் வழங்கப்படவிருக்கிறது.

இப்போட்டிப் பரீட்சையில் தோற்றி சித்தியடைந்தவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க திறைசேரி நிதி வழங்க அனுமதி மறுத்துள்ளதாகவும்-

அதன் காரணமாக அமைய அடிப்படையில் உடன் 40 தொழில்நுட்ப உத்தியோகத்தர்களை நியமிக்க வடக்கு கிழக்கு மாகாண பொறியியல் சேவைகள் அமைச்சு முடிவு செய்துள்ளதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

இவர்களை தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு யாழ். நிர்மாணத் திணைக்கள பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் நடைபெறவிருக்கிறது. (ஒ-3)

# எதிரணிக் கூட்டில் லலித் பிரிவினர் இணைவர்?

கொழும்பு, மே 27

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் லலித் பிரிவினர் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் இணைவது குறித்து பேச்சுக்கள் நடத்துவது என்று தீர்மானித்துள்ளனர்.

இதனிடையில்—

லலித் பிரிவினர் மாவட்ட ரீதியில் தங்கள் கட்சியின் கிளைகளை அமைக்கவும் நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

# பிற்போடப்பட்டுள்ளது

வியோகழகம் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அநாதைச் சிறுவர்களுக்கான அதிர்ஷ்ட இலாபச் சீட்டி முப்பு திகதி 27-06-94 அன்று பிற்போடப்பட்டுள்ளது என்பதனை அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

(7418)

# பாராட்டும் பரிசளிப்பும்



## கவிஞர் காரை. எம்.பி. அருளானந்தன்

சுவாமி விவேகானந்தர் சிக்காகோ பிரசங்க நூற்றாண்டு விழா ஆய்வுக் கட்டுரைப் போட்டியில் முதலிடத்தினைப் பெற்ற நாளை (1994 – 05 – 28) சனிக்கிழமை இளங் கலைஞர் மண்டபத்தில் நடைபெறும் விவேகானந்தர் நூற்றாண்டு விழாவில் பாராட்டுக்களையும் பரிசினையும் பெறுகின்ற

ஆசிரியர் எம். பி. அருளானந்தன்
அவர்களை

## வாழ்த்துகின்றோம்

- காரைநகர் மக்கள்.

காரைநகர் மக்கள் சார்பில்

அன்பளிப்பு:
செல்லப்பா களஞ்சியம்
கேணல் கிட்டுச் சாலை, யாழ்ப்பாணம்.
[31118]

# சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்

## பதவி வெற்றிடம்

## லிகிதர் தரம் 302. 8

மேற்படி பதவிக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும், பொதுமுகாமையாளர் சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம், குரிய குமார் வீதி உடுவில் வடக்கு சுன்னாகம், என்ற முகவரிக்கு 1994-06-15 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்படல் வேண்டும்.

லிகிதர் தரம் 302. 8 — 10 இற்கு அமைய

சம்பளத் திட்டம்:- 1005 — 1705 / 40X5 — 50X10 இத்துடன்

அங்கீகரிக்கப்பட்ட படிகளும்,

தகைமைகள்:-

அ. ஒரே அமர்வில் எண்கணிதம் / வர்த்தக எண்கணிதம் / தூய கணிதம், தமிழ்மொழி என்பவற்றை உள்ளடக்கியதாக 05 பாடங்களில் திறமைச் சித்தியுடன் கூடிய க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் 6 பாடங்களில் சித்தி

அல்லது

ஆ. கூட்டுறவுப் பணியாளர் 11 ஆவது சம்பளத் திட்டத்தில் லிகிதர் பதவியில் 02 வருடத்திற்கு குறையாத அனுபவம், அல்லது கூட்டுறவுப் பணியாளர் 12 ஆவது சம்பளத்திட்டத்தில் லிகிதர் பதவியில் 04 வருடத்திற்கு குறையாத அனுபவம்.

1. சங்கப் பணியாளர்களுக்கு சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.
2. வயதெல்லை 18—35 வருடங்கள் கூட்டுறவுச் சங்க பணியாளர்களுக்கு வயதெல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

—பொதுமுகாமையாளர்

(ஒ/2094)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 361இல் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 27 - 05 - 1994 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org